Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, AUGUST 19, 2022

வெள்ளிக்கிழமை, 19 ஓகஸ்ட் 2022 | ஒளி: 08 கதிர் 079 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | Free



# அறுவர் கைது

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் (IUSF) ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே கைது செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2



# மாற்றுக் கொள்கைகளை நாங்கள் வகுக்கிறோம்

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகளை வெற்றிகொள்ளும் விதமான மாற்றுக் கொள்கைகளை அரசாங்கம் வகுத்து வருவதாகவும், சர்வதேச நாடுகளின் முழுமையான ஒத்துழைப்புகளை எதிர்பார்ப்பதாகவும், இலங்கைக்கான நியூஸிலாந்து உயர்ஸ்தானிகருடனான சந்திப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்

தொடர்ச்சி P2



இம்மாத இறுதியில்

# ஐ.எம்.எப் பணிக்குழு வரும்

- பணியாளர் மட்ட உடன்படிக்கையை இறுதி செய்ய முயற்சி
- தேசிய கடன் மறுசீரமைப்புக்கு தயாரில்லை
- நாட்டின் பணவீக்கத்தை நிராகரிக்க முடியாது
- குறுகியகால கடன் திட்டங்களுக்கு செல்லும் தேவை ஏற்படவில்லை
- வங்கிக் கட்டமைப்பின் கீழ் பணம் அனுப்புவோருக்கு வரிகளுடன் சலுகை

■ ஆர்.யசி

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும், ஓகஸ்ட் மாத இறுதியில் சர்வதேச நாணய நிதியத்தின் பணிக்குழு இலங்கைக்கு வர தீர்மானித்துள்ளதாகவும் மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்

மத்திய வங்கியினால் நேற்று (18) கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



**நியமனம்...**

இலங்கைக்கான அவுஸ்திரேலியாவின் உயர்ஸ்தானிகராக போல் வெஸ்லி ஸ்டீபன்ஸ் இலங்கை அரசாங்கத்தின் ஒப்புதலுடன் அவுஸ்திரேலிய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ளார்.

# "மாடறுப்பை நிறுத்தியவருக்கு பிணை தேவையில்லை"



இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்குள் 2007 ஆம் ஆண்டு அத்துமீறி நுழைந்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ், முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா, நேற்று (18) கைது செய்யப்பட்டார்.

குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்ட அவர், கோட்டை மேலதிக நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்.

தொடர்ச்சி P2



**நீர்த்தாரை பிரயோகம்...**

அடக்குமுறையை நிறுத்து கைது செய்யப்பட்ட போராட்டக்காரர்களை விடுதலைச் செய்! உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நடத்திய ஆர்ப்பாட்ட பேரணி மீது, கொழும்பு– கொம்பனி வீதியில் வைத்து பொலிஸாரால் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது (சமந்த பெரேரா)



சர்வகட்சி அரசாங்கத்தை கைவிட்டு

# தேசிய அரசாங்கத்துக்கு தயாராகிறார் ரணில்

**நிரந்தர அமைச்சரவையை அடுத்தவாரம் நியமிக்கவும் தீர்மானம்**

■ ஆர்.யசி

சர்வகட்சி அரசாங்கத்துக்குப் பதிலாக தேசிய அரசாங்கத்தை அமைப்பது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூடிய கவனம் செலுத்தி வருகின்றார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

தொடர்ச்சி P2

# விசேட விசாரணைகள் இன்று ஆரம்பிக்கும்

மே மாதம் 09 ஆம் திகதியும் அதற்கு பின்னரும் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக இன்று (19) முதல் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இந்த விசாரணைகளுக்காக ஆணைக்குழுவினூடாக விசேட அதிகாரிகள் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# வெளிநாட்டு நாணயம் உங்களிடம் இருக்கிறதா?

பொதுமக்கள் வசமுள்ள வெளிநாட்டு நாணயத்தை வங்கித்தொழில் முறைமையினுள் கவர்ந்துகொள்ளும் பொருட்டு, வெளிநாட்டு நாணயத் தாள்களை உடைமையில் வைத்திருக்கின்ற இலங்கையிலுள்ள அல்லது வதிகின்ற ஆட்களுக்காக பின்வருவனவற்றுக்காக கடந்த 15 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் 1 மாத பொதுமன்னிப்புக் காலத்தினை வழங்கும் நிதி அமைச்சர் கட்டளையொன்றினை வழங்கியுள்ளார்

தொடர்ச்சி P2

# எமது பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு

■ பா.நிரோஸ்

மொட்டுக் கட்சியினரை மகிழ்விக்கவே போராட்டக்காரர்களுக்கு எதிரான அடக்குமுறைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கட்டவீழ்த்து விட்டுள்ளதாக தெரிவிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா, எமது பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு

தொடர்ச்சி P2

# ஆளும், எதிர்க்கட்சியினரை சந்தித்து டேவிட் பேச்சு

**யாழ் விஜயத்துக்கும் ஏற்பாடு**

இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும், ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி ஒருங்கிணைப்பு அலுவலகத்தின் ஆசிய-பசிபிக் பிராந்திய பணிப்பாளர் டேவிட் மெக்லாக்லன்-கார் , வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட தரப்பினரை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

அத்துடன் 2023 - 2027 ஆம் ஆண்டுகளின் இலங்கைக்கான ஐ.நாவின் 5 வருட நிலையான அபிவிருத்தி ஒத்துழைப்புக் கட்டமைப்பு தொடர்பில் இதன் போது கலந்துரையாடியுள்ளார். மேலும், இலங்கை



எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடி நிலைமைகள் குறித்தும், அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் இலங்கை கவனம் செலுத்தவேண்டிய விடயங்கள் குறித்தும், ஏனைய முக்கிய விடயங்களாக மனித

தொடர்ச்சி P2

# விண்ணப்பக்காலம் ஓக. 26 வரை நீடிப்பு

2022 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் காலக்கெடு இம்மாதம் 26 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில்,கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை 2021க்கான செயன்முறை பரீட்சைகளில் தோற்றுவிக்க முடியாத பரீட்சார்த்திகளுக்கு இன்று (19) முதல் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை பரீட்சைகள் நடத்தப்படவுள்ளதாக பரீட்சை திணைக்களம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

# பெண்களை நிர்வாணப்படுத்த மொட்டுக்கே அதிக ஆசை

" பெண்களை இவ்வாறு அவமதிப்பது மொட்டுக் கட்சியினருக்கு ஒன்றும் புதிதல்ல



■ பா.நிரோஸ்

பெண்களை நிர்வாணப்படுத்தி வீதியில் அனுப்புவதில் மொட்டுக் கட்சியினருக்கு அதிக ஆசை இருப்பதாகவும், மொட்டுக் கட்சியினர் பெண்களை இவ்வாறு அவமதிப்பது இது முதற்தடவையல்ல எனவும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# 22க்கு எதிராக 9 மனுக்கள் தாக்கல்

பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டுள்ளது அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தச் சட்டம் அடிப்படை உரிமைகளை மீறுவதாகவும், 22 ஆவது திருத்தச் சட்டமூலத்தின் சில சரத்துக்கள் அரசியலமைப்புக்கு எதிரானது என தீர்ப்பளிக்குமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் 9 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

சட்டத்தரணி நாகாநந்த கொடித்துவக்கு மற்றும் கலாநிதி குணதாச அமரசேகர உள்ளிட்ட 9 பேரினால் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# மாற்றுக் கொள்கைகளை நாங்கள் வகுக்கிறோம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இலங்கைக்கான நியூஸிலாந்து உயர்ஸ்தானிகர் மைக்கேல் ஆப்பிள்டனுக்கும் இடையில் நேற்று(18) கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி குறித்தும், இப்போதும் இனிவரும் காலத்திலும் இலங்கை எதிர்கொள்ள வேண்டியுள்ள உணவு நெருக்கடி குறித்தும் இந்த சந்திப்பில் ஜனாதிபதி எடுத்துக்கூறியுள்ளார். நிலைமைகளை கையாளக்கூடிய விதத்தில் அரசாங்கம் மாற்று வேலைத்திட்டங்களை வகுக்க நினைக்கின்றது. அவ்வாறான கொள்கைத்திட்டங்களை வகுக்கவும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஜனாதிபதி ரணில் தெரிவித்துள்ளார்.

**" அடுத்த மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில் இந்த விடயங்களில் இலங்கை கூடிய கவனம் செலுத்தியாக வேண்டும் என்பதையும் இலங்கைக்கான நியூஸிலாந்து உயர்ஸ்தானிகர் வலியுறுத்தியுள்ளார்**

பொருளாதார முகாமைத்துவம் மற்றும் பொதுத்துறைகளில் நியூஸிலாந்து கொண்டுள்ள அனுபவங்களை பகிர்ந்துகொண்டுள்ள இலங்கைக்கான நியூஸிலாந்து உயர்ஸ்தானிகர், இவ்வாறான நிலைமைகளில் இலங்கையின் தீர்மானங்கள் சரியானதாக இருக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தியுள்ளார். சர்வதேச நாடுகளின் உதவிகளை பெற்றுக்கொள்ள இலங்கை அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளின் போது மனித உரிமைகளை பாதுகாத்தல், நீண்டகால கோரிக்கைகளுக்கு செவிமடுத்தல், மக்களின் கருத்து சுதந்திரத்திற்கு மதிப்பளித்தல் என்பன முக்கியமான விடயங்களாக கருத்தில் கொள்ளப்படும். அத்துடன் அடுத்த மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில் இந்த விடயங்களில் இலங்கை கூடிய கவனம் செலுத்தியாக வேண்டும் என்பதையும் இலங்கைக்கான நியூஸிலாந்து உயர்ஸ்தானிகர் வலியுறுத்தியுள்ளார்.

# ஐ.எம்.எப் பணிக்குழு வரும்



அவர் மேலும் கூறுகையில்.

குறிப்பிடத்தக்க அளவு இறக்குமதி செலவுகள் குறைக்கப்பட்டுள்ளதுடன், ஏற்றுமதியும் அதிகரித்துள்ளது. குறுகிய கால கடன் திட்டங்களுக்கு செல்லாமல் எம்மிடம் உள்ள நிதியில் குறிப்பிடத்தக்க அளவு நாட்டின் பிரதான தேவைகளை முகாமைத்துவம் செய்ய முடிந்துள்ளது. எனினும் நாட்டின் பணவீக்கம் அதிகரித்துள்ளதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதனால்தான் வரி அதிகரிப்புகளை செய்ய வேண்டியுள்ளது. செப்டெம்பர் மாதமளவில் இந்த நிலைமை மேலும் அதிகரிக்கும் என்றார்.

வங்கித் துறையில் பிரச்சினைகளை ஏற்படுத்தும் உள்நாட்டுக் கடன்களை மீள் கட்டமைக்காமல் கடன் நிலைத்தன்மையை அடைவதில் இலங்கை நம்பிக்கை கொண்டுள்ளது, வெளிநாட்டுக் கடன்களை மீள் கட்டமைப்போம் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாகும் எனத் தெரிவித்த ஆளுநர், உள்நாட்டு கடன் மறுசீரமைப்பானது வங்கி கட்டமைப்பை பாதிக்கும், அது பொருளாதார மீட்சிக்கு உதவாது என்றார்.

ஐ.எம்.எப்புடன் முன்னெடுக்கப்பட்டுள்ள பேச்சுவார்த்தைகள் முன்னேற்றகரமான நிலைமையில் உள்ளது. ஐ.எம். எப் பணிக்குழு இம்மாத இறுதியில் இலங்கைக்கு வருவதற்கு திட்டமிட்டுள்ளது. இதன்போது பணியாளர் மட்ட உடன்படிக்கையை இறுதி செய்ய முடியும். பின்னர் கடன் வழங்குபவர்களை அணுகவும், நிவாரணம் பெறவும் இது ஒரு அடிப்படையாக பயன்படுத்தப்படும் என நம்புவதாகவும் தெரிவித்த ஆளுநர், ஐ.எம்.எப்பின் ஆதரவுடன் இருதரப்பு கடன் வழங்குநருடன் கலந்துரையாடி கால அவகாசங்களை பெற்றுக்கொள்ள நினைக்கின்றோம் என்றார்.

வங்கிக் கட்டமைப்பின் கீழ் முறையாக பணம் அனுப்பும் நபர்களுக்கு சில சலுகைகளை கொடுக்கும் விதமாக மின்சார கார் அல்லது வேறு மின்சார வாகனங்களை பெற்றுக்கொள்ள அனுமதி வழங்கப்படும். ஆனால் வரிகளுடன் இந்த சலுகை வழங்கப்படுகின்றது. வரி சலுகைகள் இதற்கு வழங்கப்பட மாட்டாது. ஆகவே இதனை சலுகை என கருத முடியாது, மாறாக அனுமதியாக கருத முடியும் என்றார்.

ஏற்கெனவே வங்கிக்கடன்களை பெற்றிருந்தால், அவற்றை செலுத்த முடியாத நிலைமை காணப்படுகின்றது என்றால், வங்கிகளுடன் கலந்துரையடி சலுகைக் காலமொன்றை பெற்றுக்கொள்ள முடியும். அதற்கான ஏற்பாடுகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளது. வங்கிகள் இதனை கருத்தில் கொண்டு தீர்மானம் எடுக்கும் என்றார்.

# அறுவர் கைது

வசந்த முதலிகே உள்ளிட்ட ஐவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவரின் மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கொழும்பு கொம்பனித்தெரு பிளேஸ் பகுதியில் பேரணியில் ஈடுபட்டு திரும்பிய போது, கொழும்பு ஐந்துலாம்பு சந்தியில் வைத்து அவர் கைது செய்யப்பட்டார் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

# தேசிய அரசாங்கத்துக்கு தயாராகிறார் ரணில்

சர்வகட்சி அரசாங்கத்தில் ஏனைய கட்சிகளை இணைத்துக்கொள்வதில் ஏற்பட்டுள்ள இழுபறி நிலைமையை கருத்தில்கொண்டு, ஏனைய கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தனித்தனியாக அரசாங்கத்தில் இணைந்து கொண்டு, தேசிய அரசாங்கத்தை அமைப்பதே பொருத்தமானது என பல்வேறு தரப்பினர் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதற்கமைய தேசிய அரசாங்கத்திற்கு செல்ல ரணில் தீர்மானித்துள்ளார் என்றும் அந்த தரப்புகளின் தகவல்களில் இருந்து அறியமுடிகின்றது.

மேலும், தற்போது நியமிக்கப்பட்டுள்ள தற்காலிக அமைச்சரவைக்கு பதிலாக அடுத்த வாரம் புதிய அமைச்சரவை நியமிக்கப்படவுள்ளதாக அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன. எதிர்க்கட்சிகளின் ஒரு சில உறுப்பினர்கள் உள்ளடங்களாக இந்த அமைச்சரவை உருவாகவுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து அறிந்துகொள்ள முடிந்துள்ளது.

# ஆளும், எதிர்க்கட்சியினரை சந்தித்து டேவிட் பேச்சு



உரிமைகளை பாதுகாத்தல், மக்களின் கருத்து சுதந்திரம் உள்ளிட்ட அடிப்படை உரிமைகளை பாதுகாத்தல் குறித்த விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.

இந்நிலையில் அவர் யாழ்ப்பாணத்துக்கு பயணம் மேற்கொண்டு அரச மற்றும் சிவில் சமூக குழுக்களை சந்திக்கவுள்ளார்.

# 22க்கு எதிராக 9 மனுக்கள் தாக்கல்

22ஆவது திருத்தச் சட்டம் அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகளை மீறுவதாக மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். எனவே, இச்சரத்துக்கள் தொடர்பாக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் எனவும் உரிய மனுக்களில் கோரப்பட்டுள்ளன.

# எமது பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு

போராட்டக்காரர்களுக்கு எதிரான அடக்குமுறைகள் தொடர்ந்தால், அரசாங்கத்துக்கு வழங்குவதற்கு தீர்மானித்துள்ள ஒத்துழைப்புக்களை வழங்க மாட்டோம் என்றார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (18) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார். பாராளுமன்றத்தில் குழுக்களின் தலைவர் பதவிகள் அனைத்தும் எதிர்க்கட்சிகளுக்கு வழங்கப்பட வேண்டும். குறிப்பாக துறைசார் மேற்பார்வைக் குழு மீள இயங்க வேண்டும். அதன் தலைவர் பதவிகளும் எதிர்க்கட்சிக்கு வழங்க வேண்டும் என்றார்.

சர்வகட்சி அரசாங்கத்தின் வேலைத்திட்டங்கள், அதன் காலம் தொடர்பில் அரசாங்கம் எதனையும் கூறவில்லை. அடுத்த வருடம் மார்ச் மாதத்தில் பாராளுமன்றம் இரண்டரை வருட காலத்தை பூர்த்தி செய்வதால், ஜனாதிபதியால் பாராளுமன்றத்தைக் கலைக்க முடியும் என்றார்.

அடுத்த பாராளுமன்ற தேர்தல் நடைபெறும் வரையில் சர்வகட்சி வேலைத்திட்டங்களை அரசாங்கத்தால் முன்னெடுக்க முடியும் . சில பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் காலத்தில் இருந்து கடந்த 7 அரசாங்கங்களில் அமைச்சுப் பதவிகளில் இருக்கிறார்கள். இவர்கள் கடந்த 25 வருடங்களாக அரசாங்கத்தின் செலவிலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்றார்.

# "மாடறுப்பை நிறுத்தியவருக்கு பிணை தேவையில்லை"

களனி பிரதேசத்தில் மாடுகள் அறுப்பதை நிறுத்திய இந்த சந்தேகநபருக்கு பிணை தேவையில்லை என தெரிவித்த கோட்டை மேலதிக நீதவான் கேமிந்த பெரேரா, சந்தேகநபர், நவம்பர் 16ஆம் திகதியன்று நீதிமன்றத்தில் ஆஜராகினால் போதுமானது என்றும் தெரிவித்துள்ள முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவை விடுதலைச் செய்தார்.

# விசேட விசாரணைகள் இன்று ஆரம்பிக்கும்

இடம்பெற்ற வன்முறை சம்பவங்கள் , அதில் சேதமாக்கப்பட்ட அரச சொத்துக்கள், பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள், நபர்கள் தாக்கப்பட்டமை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் விசாரணைகளுக்கு தேவையான வாக்குமூலங்களை பதிவு செய்வதற்காக, தீ மூட்டப்பட்ட மற்றும் சேதமாக்கப்பட்ட வீடுகளின் உரிமையாளர்களான பாராளுமன்ற உறுப்பினர்களில் நாளாந்தம் 5 பேரை அழைக்கவுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் ரோஹினி மாரசிங்க குறிப்பிட்டார்.

அக்காலப்பகுதியில் ஏற்பட்ட சேதங்கள் தொடர்பில் சுமார் 100 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் ரோஹினி மாரசிங்க குறிப்பிட்டார்.

# பெண்களை நிர்வாணப்படுத்த மொட்டுக்கே அதிக ஆசை

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (18) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார். மொட்டுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்த என்னை மிக கீழ்த்தரமாக விமர்சித்துள்ளார். அவர் ஜனாதிபதியாக இருந்திருந்தால், அவரது வீட்டுக்கு முன்பாக ஹிருணிக்கா போராட்டம் செய்தால், ஹிருணிக்காவின் ஆடைகளை கலைந்து அவரை நிர்வாணப்படுத்தி, தாக்கி அனுப்பியிருப்பேன் என சனத் நிஷாந்த கூறியிருக்கிறார்.

பெண்களை இதுபோல மொட்டுக் கட்சியினர் அவமதிப்பது இது முதற்தடவையல்ல. இதற்கு முன்னரும் எஸ். பி.திஸாநாயக்க முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்காவை இவ்வாறு திட்டியிருந்தார். ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம். பிகள் எவராது பொது வெளியில் இதுபோல பேசியிருக்கிறார்களா? மொட்டுக்கட்சிக்கு மட்டுமே இவ்வாறான ஆசை உள்ளது என்றார்.

பெண்களை நிர்வாணப்படுத்தி வீதியில் அனுப்புவதில் மொட்டுக் கட்சியினருக்கு அதிக ஆசை இருக்கிறது. கோட்டாவின் வீட்டுக்கு முன்பாக சென்று போராடினேன் என்பதாலேயே என்னை இவ்வாறு சனத் நிஷாந்த திட்டியிருக்கிறார். அதேபோல் ஜோன்ஸ்டன் பெர்னான்டோ எம்.பியும், எனது வீட்டுக்கு முன்பாக ஹிருணிக்கா போராடினால் அவர் மீது அமிலத் தாக்குதல் மேற்கொள்ளவேன் என கூறியிருக்கிறார். இதற்கான ஆதாரம் என்னிடத்தில் உள்ளது என்றார்.

# வெளிநாட்டு நாணயம் உங்களிடம் இருக்கிறதா?

அதற்கமைய, கட்டளையில் குறித்துரைக்கப்பட்டவாறு தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கில் அல்லது வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கில் ஏற்புடையவாறு வைப்பிலிடுதல், அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வணிகருக்கு (உரிமம்பெற்ற வர்த்தக வங்கி அல்லது தேசிய சேமிப்பு வங்கி) விற்பனை செய்தல் என்ற இரண்டு விடயங்களை மத்திய வாங்கி அறிவித்துள்ளது.

# விண்ணப்பக்காலம் ஓக. 26 வரை நீடிப்பு

மேற்கத்திய இசை, பாரம்பரிய நடனம், இந்திய நடனம், ஓரியண்டல் இசை, கர்நாடக இசை, நாடகம் , பொறியியல் தொழில்நுட்பம் மற்றும் உயிரியல் தொழில்நுட்பம் தொடர்பான செயன்முறை பரீட்சைகள் இத்தினங்களில் நடைபெறும் எனவும் அறிவித்துள்ளது.

## நீர்த்தாரை பிரயோகம்...



# ராஜபக்ஷர்களின் விடுமுறை வாரத்துடன் முடிவுக்கு வரும்

பா.நிரோஸ்



ராஜபக்ஷ குடும்பத்தினர் எடுத்துக்கொண்ட தற்காலிகமான விடுமுறை அடுத்த வாரத்தோடு நிறைவுக்கு வருவதாக தெரிவிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா, அடுத்த வாரம் முதல் ராஜபக்ஷர்கள் மீண்டும் அரசியலுக்குள் நுழைவார்கள் என்றார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (18) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார். ராஜபக்ஷ குடும்பத்துக்கு தற்காலிகமாக சிறிய விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இம்மாதம் 24ஆம் திகதி நாடு திரும்புவார் என கூறுகிறார்கள். குறிப்பாக அடுத்த வாரத்தில் ராஜபக்ஷர்களுக்கு அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

நாட்டு மக்கள் போராட்டங்களால் பெற்றுக்கொண்ட வெற்றிகள் அனைத்தையும் ரணில், ராஜபக்ஷ காட்டிக்கொடுத்து வருகிறார். ராஜபக்ஷர்களின் விருப்பங்களுக்கு செயற்படக்கூடிய பாராளுமன்ற உறுப்பினர்களே தற்போது இருக்கிறார்கள் எனவும் தெரிவித்தார். சட்டத்தை சரியாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடைமுறைப்படுத்துவாராக இருந்தால் இலஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுவிக்கப்பட்ட வழக்குகளை மீள விசாரணை செய்ய வேண்டும். அதேபோல் ஊழல் குற்றச்சாட்டுக்களை கொண்ட அமைச்சர்களை அமைச்சரவையில் இருந்து நீக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# ரணிலால் நிம்மதியாக தூங்கவே முடியாது



பா.நிரோஸ்

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகத்துக்கு கல்லெறிந்தமை, ஐக்கிய தேசிய கட்சி இரண்டாகப் பிளவுப்பட்டமை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வீடு கொளுத்தப்பட்டமை ஆகிய மூன்று சம்பவங்களாலும் ஜனாதிபதி ரணிலுக்கு தீராத கோபம் உள்ளது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிக்க பிரேமசந்திர தெரிவித்தார். குறிப்பாக ஐக்கிய மக்கள் சக்தியை பிளவுபடுத்தினால் மட்டுமே ரணிலுக்கு நிம்மதியாக தூங்கவும், நிம்மதியாக உயிரிழக்கவும் முடியும் எனவும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (18) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார், நெருக்கடி நிலைமைகளை உருவாக்கியே ராஜபக்ஷர்கள் ஆட்சிக்கு எப்போதும் வந்திருக்கிறார்கள். குறிப்பாக 2005, 2010ஆம் ஆண்டு யுத்தத்தைக் காரணங்காட்டியே ராஜபக்ஷர்கள் ஆட்சிக்கு வந்தார்கள். 2019ஆம் ஆண்டு முஸ்லிம் அடிப்படை வாதத்தைக் காரணங்காட்டி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தார் என்றார்.

எனினும், தற்போது இன, மத வாதங்களை தூண்டி ஆட்சியைக் கைப்பற்ற முடியாது என்பதால், போராட்டக்காரர்களை வன்முறைக்கு தூண்டி அதனைக் காரணங்காட்டி ஒட்டுமொத்த போராட்டத்தையும் மலினப்படுத்த அரசாங்கம் முயற்சிப்பதாகவும் தெரிவித்தார். நான் முன்னாள் ஜனாதிபதியின் வீட்டுக்கும், தற்போதைய ஜனாதிபதியின் வீட்டுக்கும் முன்பாக சென்று பல போராட்டங்களை செய்திருக்கிறேன்.

ஆனால், எனக்கு எதிராக எந்த விதமான சட்ட நடவடிக்கைகளையும் எடுக்க முடியாமல் போயுள்ளது. நான் சட்டவிரோதமான முறையில் செயற்படவில்லை என்பதே இதற்குக் காரணமாகும் என்றார்.

## குழந்தைக்கு முன்னால்

# இளம் தாய்து ஷ்பிரயோகம்

## பொலிஸ் அசமந்தம்; மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

ஷிஹான்




தனது 3 வயது குழந்தைக்கு முன்னால் இளம் தாய் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளான சம்பவமொன்று, அம்பாறை - காரைதீவு பொலிஸ் நிலையத்துக்ட்பட்ட மாளிகைக்காடு கிழக்கு பகுதியில் பதிவாகியுள்ளது.

கடந்த 03.07.2022 அன்று 25 வயதுடைய பெண்ணை, கணவன் வீட்டில் இல்லாத வேளை அவரது 03 வயது குழந்தைபார்த்து இருந்த சந்தர்ப்பத்தில் அயலவர் ஒருவரால் கத்தி மூலம் அச்சுறுத்தபட்டு, பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளானதாக முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பெண், 1 வயது மற்றும் 3 வயது பெண் குழந்தைகளின் தாய் என்பதுடன், மாளிகைக்காடு கிழக்கு பகுதியில் உள்ள வீடொன்றில் வாடகை அடிப்படையில் வசித்து வந்துள்ளார்.

இந்நிலையில், வீட்டில் கணவன் இல்லாத சம்பவ தினமன்று இரவு 7 மணியளவில் அத்துமீறி பிரவேசித்த நபர், 03 வயதான தனது மகள் பார்த்து கொண்டிருந்த வேளை கத்திமூலம் அச்சுறுத்தபட்டு, வலுக்கட்டாயமாக பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளானதாகவும் அபயக்குரல் எழுப்பியும் எவரும் தன்னை காப்பாற்றவில்லை எனவும் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தன்னை துஷ்பிரயோகப்படுத்திய நபர் 20 ஆயிரம் ரூபாய் பணம் மற்றும் சில பொருட்களை கொள்ளையிட்டு சென்றுள்ளதாகவும் முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த பெண் வழங்கிய முறைப்பாட்டை பெற்றுக்கொண்ட காரைதீவு பொலிஸ் நிலையம் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கான நீதியான நடவடிக்கை எடுக்க தவறியுள்ளது.

இதனையடுத்து, இது தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழுவுக்கு சென்று முறையிட்டுள்ளார்.

வலுக்கட்டாயமாக தன்னை பாலியல் துஷ்பிரயோகம் செய்த நபரிடம் இருந்து பாதுகாப்பு பெற்று தருவதுடன், அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க தவறிய காரைதீவு பொலிஸ் பொறுப்பதிகாரிக்கும் எதிராக கல்முனை மனித உரிமை ஆணைக்குழுவில் அப்பெண் முறைப்பாடு வழங்கியுள்ளார்.

இந்த முறைப்பாட்டுக்கமைய, காரைதீவு பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு, கல்முனை மனித உரிமை ஆணைக்குழுவினால் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

# சொகுசு வாகனங்களும், வீடும் சஜித்துக்கு எப்படி கிடைத்தன

பா.நிரோஸ்

எந்நேரத்திலும் தேர்தலுக்கு முகங்கொடுக்க ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தயாராக இருப்பதாக தெரிவிக்கும் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி, முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவுக்கு எந்த விதமான வியாபாரங்களோ, சொத்துக்களோ இல்லாத நிலையில் சொகுசு வாகனங்களும், கொழும்பில் சொகுசு வீடும் எவ்வாறு சஜித்துக்கு வந்தன என கேள்வியெழுப்பினார்.

பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று (18) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கேள்வியெழுப்பினார்.

எரிபொருள், காஸ் உள்ளிட்ட பிரச்சினைகளை முதலில் தீர்க்க வேண்டும். இதனை விடுத்து ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவும், தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவும் தேர்தலுக்கு செல்ல வேண்டும் என கூறுகிறார்கள் என்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒன்றரை வருடங்களுக்குள் மீள கட்டியெழுப்புவார் அப்போது ஐக்கிய மக்கள் சக்தியின் கதை முடியும். அதேபோல் நாட்டின் நெருக்கடி நிலைமைகள் ஒவ்வொன்றாக ரணில் தீர்ப்பார். அதனால் தேசிய மக்கள் சக்தியின் கதையும் முடிவுக்கு வரும் என்றார்.

முன்னாள் ஜனாதிபதி, முன்னாள் பிரதமர், முன்னாள் நிதி அமைச்சர் ஆகியோரை போராட்டங்கள் ஊடாக வீட்டுக்கு அனுப்பிவிட்டோம் என்கிற சந்தோஷத்தில் அநுரகுமார திஸாநாயக்க இருக்கிறார். இதனால் தேர்தலுக்கு சென்றால் தமது கட்சிக்கு வெற்றிக்கிடைக்கும் என அநுர நினைக்கிறார். நாளையே தேர்தல் நடந்தாலும் அதற்கு முகங்கொடுப்பதற்கு பொதுஜன பெரமுன தயாராக இருக்கிறது என்றார்.

# ஜின்னா புலமைப்பரிசில்



பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தால், சிறப்புத்தேர்ச்சி பெற்ற இலங்கை உயர்தர மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கும் வைபவம், கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) ஒகஸ்ட் 16 ஆம் திகதியன்று நடைபெற்றது.

உயர்தர மற்றும் சாதாரண தர இலங்கை மாணவர்களுக்கு பாகிஸ்தான் அரசாங்கத்தினால் 2006 ஆம் ஆண்டு முதல் புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், இதுவரை சுமார் 2300 இலங்கை மாணவர்கள் இந்த ஜின்னா புலமைப்பரிசில் புலமைப்பரிசில் திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர்.

# ரிஷாட்டின் கோரிக்கைக்கு ஜனாதிபதி சாதகமான பதில்



மன்னார் - புத்தளம் பாதை (எலுவன்குளம் ஊடாக) கடந்த பலவருடங்களாக மூடப்பட்டிருந்த நிலையில், அவற்றை மீளத்திறந்து மக்களின் போக்குவரத்து மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்கான உதவிகளை செய்யுமாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் முன்வைத்த கோரிக்கைக்கு சாதகமான பதில் கிடைக்கப் பெற்றுள்ளது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி அதன் தலைவர் ரிஷாட் பதியுதீன் தலைமையில், ஜனாதிபதியினை சந்தித்த போது மேற்படி பாதையின் அவசியம் தொடர்பில் எடுத்துரைத்திருந்த நிலையில், இதற்கான ஆரம்ப பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எலுவன்குளம் பகுதிக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர்கள், வன்னாத்தவில்லு பிரதேச செயலாளர் மற்றும் வனவிலங்கு திணைக்கள அதிகாரிகள் கொண்ட குழுவினர் வருகை தந்திருந்தனர். மேற்படி குழுவினர்கள் நடவடிக்கைகளை இங்கு மேற்கொண்டனர். இதன்போது, வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனும் இங்கு வருகை தந்திருந்ததுடன், குறித்த பாதை தொடர்பில் அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டார்.

## நிலைபேறான அபிவிருத்தி கூட்டுறவு சட்டகத்தில்

# ஐ. நா– இலங்கை கையொப்பம்



ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி கூட்டுறவு சட்டகம் 2023 – 2027 (UNSDCF) ஆனது இலங்கை அரசாங்கம் மற்றும் இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் காரியாலயத்தினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இலங்கையிலுள்ள அனைத்து ஐ.நா முகவர் அமைப்புகளினதும் செயற்பாடுகளை வழிநடத்தும் சட்டகம் என்பதோடு, நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலை அடைவதற்கான செயற்பாடுகளை துரிதப்படுத்துவதற்கு இலங்கைக்கான ஐக்கிய நாடுகளின் ஒட்டுமொத்த நோக்கம் மற்றும் பங்களிப்பையும் இது ஒருங்கிணைக்கும்.

இக் கூட்டுறவு சட்டகமானது பொருளாதார வீழ்ச்சி மற்றும் அதனோடு இணைந்த கொவிட் 19 பாதிப்புகள் என்பவற்றிலிருந்து வேகமாக மீளெழுச்சி பெறுவதற்கான செயற்பாடுகளை துரிதப்படுத்துவதற்காக, பொருளாதாரம் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளுக்கு புத்துயிர் அளிப்பதற்கான ஒத்துழைப்பு, சமூக சேவைகள், நியாயமான தொழில், சமூக ஒருங்கிணைவு, மற்றும் இலங்கையிலுள்ள அனைத்து மக்களுக்கும் சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு என்பவற்றுக்கு முன்னுரிமை அளிக்கும்.

இதனை இலங்கை அரசாங்கத்தின் சார்பில் திறைசேரி செயலாளர் மஹிந்த சிறிவர்தன மற்றும் ஐக்கிய நாடுகளின் சார்பில் ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹனா சிங்கர்-ஹெம்டி ஆகியோரால் இணைந்து கையொப்பமிடப்பட்டது.

## தமிழ்மொழி தின போட்டிகள்:

# திருத்தப்பட்ட திகதிகள்; கல்வி அமைச்சு அறிவிப்பு

சகா

சமகால நெருக்கடி நிலைமையை கருத்திக்கொண்டு, அகில இலங்கை தமிழ் மொழி தின போட்டிகள் நடத்தப்படவேண்டிய திருத்தப்பட்ட திகதிகளை கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது. அதற்கமைவாக, கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் திருமதி என் புள்ளநாயகம் கிழக்கு மாகாணத்தில் போட்டிகள் நடத்தப்படுவதற்கான திருத்தப்பட்ட திகதிகள் தொடர்பாக சகல வலய கல்வி பணிப்பாளர்களுக்கு அறிவித்திருக்கின்றார். இதன்படி, சகல வலயமட்ட தமிழ் மொழி தின போட்டிகளும் எதிர்வரும் 29ஆம் திகதிக்கிடையில் நடத்தப்பட வேண்டும். அதேபோன்று, மாவட்ட மட்ட போட்டிகள் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 4ஆம் திகதிக்கிடையே நடத்தப்பட வேண்டும்.

அதன்படி, கிழக்கு மாகாண மட்ட போட்டிகள், எதிர்வரும் செப்டெம்பர் 24ஆம் மற்றும் 25ஆம் திகதிகளில் நடைபெறும். இதற்கான விண்ணப்பங்கள், எதிர்வரும் செப்டெம்பர் 10ஆம் திகதிக் கிடையில் அனுப்பப் படவேண்டும்.

எனினும், எழுத்தாக்க போட்டிகளுக்கான வலய மட்டப் போட்டிக்கான விண்ணப்ப முடிவு திகதி 20.8.2022 ஆகும். மாவட்ட மற்றும் மாகாண எழுத்தாக்க போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவு திகதி 11.09.2022 என அறிவிக்கப்பட்டிருந்தது.

# முறைகேடுகளை ஆராய விசேட குழு




வடமாகாண விவசாய பணிப்பாளர் பணிமனையில் இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு மூவர் கொண்ட குழுவை வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா நியமித்துள்ளார்.

விவசாய பணிப்பாளர் பணிமனையில் இடம்பெற்ற நிதி மற்றும் நிர்வாக முறைகேடுகள் தொடர்பில் விசாரிப்பதற்கான ஆரம்ப புலன் விசாரணை குழுவே இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளது.

குறித்த விசாரணை குழுவில் வடமாகாண சிறுவர் நன்னடத்தை அமைச்சின் கணக்காளர் விஷ்ணு, வட மாகாண விவசாய அமைச்சின் நிர்வாக அதிகாரி சாந்தசீலன் மற்றும் வட மாகாண விதை உற்பத்திக் கூட்டுறவு நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் சதீஷ் ஆகியோர் இடம்பெற்றிருக்கின்றனர்.

# விமல் அணிக்கு புதிய சவால்

பா.நிரோஸ்




முடிந்தால் புதிய கூட்டணி ஒன்றை அமைத்து 9 ஆயிரம் வாக்குகளையேனும் பெற்றுக்காட்டுங்கள் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார, விமல் அணிக்கு சவால் விடுத்தார்.

சவால்களை ஏற்றுக்கொள்வதையே எப்போதும் பொதுஜன பெரமுன விரும்பும். மஹிந்த அலையை தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளவே விமல் அணி எண்ணியது. பொதுஜன பெரமுனவுக்குப் போட்டியாக விமல் அணியினர் கூட்டணி ஒன்றை அமைத்தால் அது தொடர்பில் தாம் மகிழ்ச்சியடைவதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சியை அதன் தலைவரும் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க மீள கட்டியெழுப்புவார் எனவும் தெரிவித்தார்.

## கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்

# தௌபீக் இடமாற்றம்; பிரியாவிடைக்கு ஏற்பாடு

பாறுக் ஷிஹான்

இடமாற்றலாகி செல்லவுள்ள கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஏ.ஆர்.எம் தௌபீக்கான பிரியாவிடை நிகழ்வு, கல்முனை சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெறவுள்ளது.

குறித்த பிரியாவிடை நிகழ்வு, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல்.எம் றிபாஸ் தலைமையில், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை கேட்போர் கூடத்தில் நாளை சனிக்கிழமை (20) நடைபெறவுள்ளது.



கொழும்பு மாவட்டத்துக்கு இடமாற்றலாகி செல்லவுள்ள கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ.ஆர்.எம் தௌபீக் 2021.04.09 கடமை ஏற்ற காலங்களில் கொவிட் தொற்றுக்கு மத்தியில் இன, மத பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால் மிகவும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றியமை தொடர்பாக இதன்போது பொன்னாடை போர்த்தி, நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார்.

நீண்ட காலமாக மூடப்பட்டுள்ள மன்னார் - புத்தளம்

# வீதியை மீள் திறக்க முஸ்தீபு

### அதிகாரிகள் குழு கள விஜயம்





பல வருடங்களாக மூடப்பட்டிருந்த எலுவன்குளம் ஊடான மன்னார் - புத்தளம் வீதியை மீளத் திறந்து மக்களின் போக்குவரத்து மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்கான உதவிகளை செய்யுமாறு, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை முன்வைத்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி, அதன் தலைவர் ரிஷாட் பதியுதீன் தலைமையில், ஜனாதிபதியை அண்மையில் சந்தித்த போது, மேற்படி வீதியின் அவசியம் தொடர்பில் எடுத்துரைத்திருந்தனர்.

இந்நிலையில், இதற்கான ஆரம்ப பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எலுவன்குளம் பகுதிக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர்கள், வன்னாத்தவில்லு பிரதேச செயலாளர் மற்றும் வனவிலங்கு திணைக்கள அதிகாரிகள் கொண்ட குழுவினர் நேற்று முன்தினம் (17) வருகை தந்திருந்தனர்.

மேற்படி குழுவினர் கள நடவடிக்கைகளை இங்கு மேற்கொண்டனர். இதன்போது, வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனும் வருகை தந்திருந்ததுடன், குறித்த வீதி தொடர்பில் அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டார்.

இன்றைய விஜயத்தின் போது, அதிகாரிகளினால் எலுவன்குளம் பாலத்தின் புனரமைப்புத் தொடர்பிலான வரைபடம் தயார்படுத்த போதுமான அளவீட்டு பணிகள் முன்னெடுக்கப்பட்டதுடன், மேற்படி பாலத்தில் இருந்து மறிச்சுக்கட்டி நோக்கி செல்லும் உட்பாதையில் சேதமடைந்துள்ள இரு பாலங்களை பார்வையிட அதிகாரிகள் குழுவினர், அங்கு விஜயத்தை மேற்கொண்டனர்.



## சந்திப்பு...

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை, கூட்டுறவுத் திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்டத்துக்கான உதவிப் பணிப்பாளர் நேற்று (18) சந்தித்தார். கிளிநொச்சி மாவட்டத்தில் கூட்டுறவுத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டது.

கைக்குழந்தையுடன் நின்ற

# பெண்ணிடம் தங்க சங்கியை அபகரித்துச் சென்ற பெண்

**நல்லூர் கோவில் வளாகத்தில் கைது**

நல்லூர் கந்தசுவாமி கோவில் வளாகத்தில் கைக்குழந்தையுடன் நின்ற பெண்ணிடம் தங்கச் சங்கியை அபகரித்துச் சென்ற பெண், யாழ். மாவட்ட புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும், குறித்த பெண்ணிடம் இருந்து 4 இலட்சம் பெறுமதியான தங்கச் சங்கிலியும் மீட்கப்பட்டுள்ளது.

தாயாரிடமிருந்த கைக்குழந்தை அழுததால் தான் பார்ப்பதாக கூறிய மற்றொரு பெண் குழந்தையை வாங்குவதாக பாசங்கு செய்து, தாயார் அணிந்திருந்த சங்கிலியை அறுத்து எடுத்துக் கொண்டு தப்பித்துள்ளார்.

சங்கிலியை பறிகொடுத்த பெண், நல்லூர் உற்சவகால பொலிஸ் பிரிவில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில், யாழ்ப்பாணம் மாவட்ட புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது, அராலியைச் சேர்ந்த 39 வயதுடைய பெண் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர், யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டுள்ளார்.

வீட்டை விட்டு வெளியேறிய

# யாழ். சிறுமிகளுக்கு நடந்த கொடுமை

### நீதிமன்றம் அதிரடி

யாழ்ப்பாணத்தில் சிறுமிகள் இருவரை கடத்திச் சென்று தகாத உறவு கொண்ட குற்றச்சாட்டில் ஐவரை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

அத்துடன், வீட்டை விட்டு வெளியேறிய சிறுமிகள் இருவரையும் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் நேற்று முன்தினம் (17) உத்தரவிட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

இரண்டு வாரங்களுக்கு முன்னர் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த 17 வயதுச் சிறுமிகள் இருவர் வீட்டிலிருந்து வெளியேறி, யாழ்ப்பாணம் வந்து பஸ் நிலையத்தில் இருந்துள்ளனர்.

அவர்கள் தொடர்பில் அறிந்த ஆண் ஒருவர், சிறுமிகள் இருவரையும் அழைத்துச் சென்று, சாவகச்சேரியில் உள்ள விடுதி ஒன்றில் தங்கியிருந்துள்ளார்.

நேற்று முன்தினம் அந்த விடுதியிலிருந்து வெளியேறிய மூவரும் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்துக்கு மீண்டும் வந்துள்ளனர்.

அன்றைய தினம் இரவு வாகனம் ஒன்றில் பஸ் சாரதிகள் இருவர், நடத்துநர்கள் இருவர் என மேலும் நால்வர் இணைந்து வாகனம் ஒன்றில் எழுதுமட்டுவாழ் பற்றைக் காட்டுக்குள் சிறுமிகளை அழைத்துச் சென்றுள்ளனர்.

அதன்போது சிறுமி ஒருவர் சாதுரியமாகப் பேசி வாகனத்திலிருந்து இறங்கி எழுதுமட்டுவாழில் மக்கள் வாழும் பகுதிக்கு வந்துள்ளார்.

வீதியில் சென்றவர்களிடம் நடந்தவற்றை தப்பிவந்த சிறுமி தெரிவித்த நிலையில் பொலிஸ் அவசர பிரிவுக்கு அறிவிக்கபட்டது.

மற்றைய சிறுமியுடன் சென்ற ஐவரும் மறுநாள் யாழ்ப்பாணம் நகருக்கு அழைத்து வந்து சிறுமியை இறக்கிவிட்டுச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட உத்தரவுக்கு அமைய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

சிறுமிகளிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் அவர்களை கடத்திச் சென்றமை மற்றும் தகாத உறவு கொண்டமை என்ற குற்றச்சாட்டுக்களின் கீழ் ஐவர் கைது செய்யப்பட்டனர்.

வீட்டைவிட்டு வெளியேறி வந்து துர்நடத்தையில் ஈடுபட்டமையினால் சிறுமிகளும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

கொரோனா தொற்று;

# யாழில் பெண் மரணம்

யழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த கொரோனா தொற்றாளரான 76 வயதுப் பெண், நேற்று முன்தினம் (17) மரணித்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் கடந்த சில தினங்களுக்கு முன் கொரோனா உறுதி செய்யப்பட்டதையடுத்து சிகிச்சை பெற்று வந்த நிலையில் இவ்வாறு மரணித்துள்ளார்.

# தொல்பொருள் அறிக்கை சமர்ப்பிப்பு

**ஹஸ்பர்**

மத்திய கலாசார நிதியத்தால், மட்டக்களப்பு, நெளுகல தொல்பொருள் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணியின் அறிக்கை, கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்திடம் கையளிக்கப்பட்டது.



இந்த அறிக்கையை, மத்திய கலாசார நிதியத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் காமினி ரணசிங்க, கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க ஆகியோரிடம் வழங்கினார்.

தொல்பொருள் தளத்தில் உள்ள பழைய கட்டடங்கள், தொட்டிகள், தூபிகள் மற்றும் ஆசனகாரங்கள் உட்பட தொல்பொருள் மதிப்புள்ள பல தகவல்கள் இந்த அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன.

கோறளைப்பற்று மேற்கு பிராந்திய செயலகத்துக்குட்பட்ட வடமுனை கிராம சேவை களத்தில் அமைந்துள்ள நெலுகல தொல்பொருள் தளம், 2,000 ஏக்கர் பரப்பளவில் பரந்து விரிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

யில் விவசாயத்துக்குத் தேவையான டீசல் விநியோகத்தில்

# புதிய திட்டம் நடைமுறை

**ஹஸ்பர்**

திருகோணமலை மாவட்டத்தில் சிறுபோக நெல் அறுவடைக்குத் தேவையான டீசல் விவசாயிகளுக்கு வழங்குவதற்கு முறைமைப்படுத்தப்பட்ட திட்டமொன்று தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக திருகோணமலை மாவட்டச் செயலாளர் பி.எச்.என். ஜயவிக்ரம தெரிவித்தார்.

மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் (17) மாவட்ட விவசாய சங்கங்களின் பிரதிநிதிகளுடனான கூட்டத்தின் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாவட்டத்தில் மொரவெவ, கோமரங்கடவெல, பதவிசிறீபுர ஆகிய பிரிவுகளில் நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டு இறுதி கட்டத்தை நெருங்கியுள்ளது.

விவசாயிகளுக்கு அறுவடைக்கான டீசல் விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு 10 லீற்றர் என்றவாறு சிபெட்கோ எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூலம் கிரமமாக வழங்கப்பட்டு வருகின்றன.



மாவட்டச் செயலாளரின் அறிவுறுத்தலின்படி, பிரதேச செயலாளர்கள் மற்றும் கமநல அபிவிருத்தி திணைக்களம் இச்செயற்பாட்டை ஒருங்கிணைத்து செயற்படுத்தி வருகின்றனர்.

அதேபோல் விதைப்பு நடவடிக்கள் பிந்தி ஆரம்பிக்கப்பட்ட பிரதேசங்களில் நெல் அறுவடை தற்போது தொடக்கம் செப்டெம்பர் மாத நடுப்பகுதி வரையான காலப்பகுதியில் கூடுதலாக நடைபெறும் என்பதனால் அதற்கான எரிபொருளை கிரமமான முறையில் விவசாயிகளுக்கு வழங்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு, விவசாய சங்க பிரதிநிதிகள், மாவட்டச் செயலாளரின் கவனத்துக்கு மாவட்டச் செயலாளர் கொண்டுவந்தனர்.

விவசாயிகள் பயிர்ச்செய்கை மேற்கொண்ட காலப்பகுதியை அடிப்படையாக கொண்டு, அறுவடைக்கான டீசல் தேவைப்பாடு தொடர்பான பட்டியல் கமநல அபிவிருத்தி திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது.

அப்பட்டியலிற்கேற்ப விவசாயிகளுக்கு டீசல் வழங்கும் செயற்பாடு பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இச்செயற்பாடு துரிதப்படுத்தப்பட தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நெல் அறுவடைக்காக கொண்டுவரப்படும் டீசல் முற்றாக விவசாயகளுக்கே விநியோகிக்கப்படும். அது குறித்து உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி மேற்பார்வை செய்யுமாறு, மாவட்டச் செயலாளர் இதன்போது வேண்டிக்கொண்டார்.



வீதியை விட்டு விலகி

# வாகனம் விபத்து; சாரதி காயம்

**தீஷான் அஹமட்**

திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதியிலுள்ள திருகோணமலை - சீனக்குடா விமானப்படை தளத்துக்கு அருகில் உள்ள வளைவொன்றில் கப் ரக வாகனமொன்று, பாதையைவிட்டு விலகி விபத்துக்குள்ளானது.

வாகனச் சாரதியின் கவனயீனத்தால் நேற்று (18) அதிகாலை ஏற்பட்ட இந்த விபத்தில் சாரதி சிறு காயங்களுடன் உயிர்தப்பியுள்ளார்.

விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை திருகோணமலை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

திசை திருப்பப்படவிருந்த பசளை

# ஆண்டங்குள விவசாயத்துக்கே வழங்கப்பட்டது

### குச்சவெளி தவிசாளர் அதிரடி

**எப்.முபாரக்**

புல்மோட்டை ஆண்டாங்குள (இடைப்போக) விவசாயிகள், தங்களுக்கு தேவையான பசளை, புல்மோட்டை கமநல சேவை நிலையத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த நிலையில், மேற்படி விவசாயிகளுக்கு வழங்காது அது பிறிதொரு ஊருக்கு ஏற்றப்படவுள்ளதாக அறிந்துகொண்டனர்.

குறித்த விடயத்தை விவசாயிகள் உடனடியாக குச்சவெளி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.முபாறக்கின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர்.

விரைந்து செயற்பட்ட தவிசாளர், கமநல திணைக்கள ஆணையாளரை தொடர்புகொண்டு, ஆண்டங்குள விவசாயிகளின் நிலைமையைத் தெளிவுபடுத்தி, பசளையை அவர்களுக்கு



வழங்க வேண்டிய முக்கியத்துவத்தை உணர்த்தினார்.

இதனையடுத்து, திருகோணமலை மாவட்ட கமநல உதவி ஆணையாளர் திருமதி வர்னியின் ஒத்துழைப்பால், புல்மோட்டை கமநல சேவை நிலையத்தில் வைத்து நிலைய கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம். ரனூஸின் தலைமையில், ஆண்டங்குள விவசாயிகளுக்கு பசளை வழங்கிவைக்கப்பட்டதாக குச்சவெளி தவிசாளர் தெரிவித்தார்.

# ஓட்டமாவடி பிரதேச செயலகத்தில்

### இரத்ததான முகாம் நடத்த ஏற்பாடு

**எச்.எம்.எம்.பர்ஸான்**

கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச செயலகத்தில் இரத்ததான முகாமொன்று, எதிர்வரும் புதன்கிழமை (24) நடைபெறவுள்ளதாக இளைஞர் சேவை உத்தியோகத்தர் எஸ்.ஐ.எம்.பஸீல் தெரிவித்தார்.

நாட்டின் இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்காக, ஓட்டமாவடி பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் ஏற்பாடு செய்துள்ள இந்த இரத்ததான முகாம் எதிர்வரும் 24ஆம் திகதியன்று காலை 8.30 மணி முதல் பிற்பகல் 03 மணி வரை நடைபெறவுள்ளது.

ஆண், பெண் என இரு பாலாரும் இந்த இரத்ததான முகாமில் கலந்துகொண்டு இரத்ததானம் வழங்குமாறு, இளைஞர் சேவை உத்தியோகத்தர் எஸ்.ஐ.எம்.பஸீல் வேண்டிக் கொண்டுள்ளார்.

வரட்சியினால் பாதிக்கப்பட்ட

# மஜ்மா நகருக்கு குடிநீர் வழங்கல்

**எம்.எஸ்.எம் நூர்தீன்**

ஓட்டமாவடி - மஜ்மா நகரில் வரட்சியால் பாதிக்கப்பட்டு, குடிநீர்த் தட்டுப்பாடு நிலவும் பகுதிகளுக்கு பௌசர்களில் நேற்று (18) குடிநீர் விநியோகிக்கப்பட்டது.

கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வேண்டுகோளுக்கமைய, பிரதேச செயலாளரால் மாவட்ட அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்திடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய, ஓட்டமாவடி பிரதேச சபையின் ஏற்பாட்டில் இவ்வாறு குடிநீர் விநியோகிக்கப்பட்டது.

இதில் அப்துர் ரஹ்மான் வீட்டுத்திட்டம், முஹைதீன்



அப்துல் காதர் வீட்டுத்திட்டம், சிராஜிய்யா அரபுக்கல்லூரி, பிலால் பள்ளிவாசல் மற்றும் றஹ்மா ஜும்ஆ பள்ளிவாசல் போன்றவற்றுக்கு ஆரம்பக் கட்டமாக நீர்த் தாங்கி வைத்து குடிநீர் விநியோகிக்கப்பட்டது.

குடிநீர் வழங்கும் நிகழ்வில் பிரதேச செயலக அனர்த்த சேவைகள் உத்தியோகத்தர் கே.புவிதரன், கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் ஏ.எல்.சமீம், பிரதேச சபை சாரதி முஹம்மது ஜபீர் ஆகியோர் கலந்துகொண்டனர்.



மலையக கட்சிகள் தேசிய அரசாங்கத்தில்

# அமைச்சு பொறுப்புகளை ஏற்கவேண்டும்

ஆ.ரமேஸ்

பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்கும் அனைத்து மலையக பிரதநிதிகளும் தலைவர்களும், ஒன்றுப்பட்டு அமையவுள்ள தேசிய அரசாங்கத்தில் அமைச்சு பொறுப்புகளைப் பெற வேண்டும் என, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான பி.சக்திவேல் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

**“ மலையகத்தை பிரதிநிதிப்படுத்துகின்ற மலையக கட்சிகள், தங்களது ஆதரவை தெரிவித்திருந்தாலும் கூட, முடிந்தளவு அதிகமான அமைச்சுகளை பெற்று மலையக சமூகத்தின் குறைபாடுகளை நீக்க முன்வர வேண்டும்**

அவ்வாறு அவர்கள் பெறுகின்ற அமைச்சுகளில் இருந்து, இந்த மக்களுக்கு எல்லாவித சேவைகளும், கிடைக்க குறைந்தது, மூன்று அல்லது நான்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுகளை, மலையக தலைமைத்துவங்கள் பெறவேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் ஒரு பாரிய பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டு 1973,74,75 ஆம் ஆண்டுகளைப் போலவே மீண்டும் வரிசைகள் ஏற்பட்டுள்ளன; தட்டுப்பாடுகளும் நிலவுகின்றன.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் இந்த நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்கு பகிரங்க அழைப்பொன்றை விடுத்துள்ளார்.

இந்தச் சந்தர்ப்பத்தை மலையக மக்களும் முழுமையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

மலையகத்தை பிரதிநிதிப்படுத்துகின்ற மலையக கட்சிகள், தங்களது ஆதரவை தெரிவித்திருந்தாலும் கூட, முடிந்தளவு அதிகமான அமைச்சுகளை பெற்று மலையக சமூகத்தின் குறைபாடுகளை நீக்க முன்வர வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

இந்தியாவை அனுசரிக்கும் அனுகுமுறையையே

# இலங்கை பின்பற்ற வேண்டும்

## என்கிறார் இராதா எம்.பி

எஸ்.கணேசன்

இந்தியாவை அனுசரித்துச் செல்லும் அணுகுமுறையையே இலங்கை பின்பற்ற வேண்டும் எனத் தெரிவித்த மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவருமான வீ. இராதாகிருஷ்ணன், ஆளுநர்கள் நியமனத்தைவிடவும் மாகாண ஆட்சியை நிறுவுவதற்கான நகர்வுகள் சம்பந்தமாக கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றார்.

நுவரெலியாவில் நேற்று (18) நடைபெற்ற ஊடக சந்திப்பில், சமகால அரசியல் நிலைவரங்கள் குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

“ஆளுநர் நியமனம் சம்பந்தமாக ஐக்கிய தேசிய கட்சிக்கும், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையில்



கருத்து மோதல் ஏற்பட்டுள்ளது. தற்போதைய நிலையில், ஆளுநர் நியமனங்களைவிட, மாகாணத்தில் மக்கள் ஆட்சியை ஏற்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும். குறிப்பாக, மாகாணங்களுக்கான அதிகாரம் என்பது ஆளுநர் ஊடாக அல்லாமல், மக்கள் ஊடாக தெரிவுசெய்யப்படும் முதலமைச்சர் ஊடாகவே கையாளப்பட வேண்டும். அதிகாரங்களை முழுமையாகப் பகிரும் வகையில், 13 ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக அமலாக வேண்டும் எனவும் ராதாகிருஷ்ணன் வலியுறுத்தினார்.

13 ஆவது திருத்தச் சட்டமூலத்தை முழுமையாக அமல்படுத்தாமல் இழுத்தடிக்கும் இலங்கை, தற்போது சீன கப்பலையும் நாட்டுக்குள் அனுமதித்துள்ளது. எது எப்படி இருந்தாலும் இந்தியாவை அனுசரித்து செல்லும் அணுகுமுறையையே இலங்கை பின்பற்ற வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

அதேவேளை, சர்வகட்சி அரசு தொடர்பில் கருத்து வெளியிட்ட ராதாகிருஷ்ணன், அதற்கான பேச்சுகள் இன்னமும் வெற்றியளிக்கவில்லை. சர்வகட்சி அரசில் அமைச்சில் பதவிகளை ஏற்கக்கூடாது என்பதே மலையக மக்கள் முன்னணியின் நிலைப்பாடு. இது தொடர்பில் தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அடுத்த வாரமும் இது தொடர்பில் ஆராயப்பட்டு, உறுதியான முடிவு அறிவிக்கப்படும்" என்று குறிப்பிட்டார்.

இலஞ்சம் பெற்றக் குற்றச்சாட்டில்

# பொலிஸ் சார்ஜன்ட் கைது

ஹட்டன் நீதவான் நீதிமன்றில் விசாரிக்கப்பட்டு வரும் வழக்கொன்றுக்காக, முறைப்பாட்டு தரப்பினரிடமிருந்து 20,000 ரூபாய் இலஞ்சம் பெற்ற சம்பவத்துடன் தொடர்புடைய, நீதிமன்றில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட், இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் அதிகாரிகளால் நேற்று முன்தினம் (17) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஹட்டன் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரின் காணாமல் போன வங்கி அட்டை தொடர்பில், ஹட்டன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை, நீதிமன்றில் ஆஜர்படுத்தி, சட்ட நடவடிக்கையை கடுமையாக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என தெரிவித்து, முறைப்பாட்டு தரப்பினரிடம் இருந்து 50,000 ரூபாயை சந்தேகநபரான பொலிஸ் சார்ஜன்ட் கோரியுள்ளார்.

**“ பாதிக்கப்பட்ட தரப்பினர் செய்த முறைப்பாட்டுக்கு அமைய, இலஞ்சம் கோரிய தரப்பிடமிருந்து 20,000 ரூபாயைப் சார்ஜன்ட் பெற்றுக்கொண்ட போதே, அவர் அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார்**

இது தொடர்பில், பாதிக்கப்பட்ட தரப்பினர் இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு குழுவினரிடம் செய்த முறைப்பாட்டுக்கு அமைய, இலஞ்சம் கோரிய தரப்பிடமிருந்து 20,000 ரூபாயைப் சார்ஜன்ட் பெற்றுக்கொண்ட போதே, அவர் அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரான பொலிஸ் சார்ஜன்ட் ஹட்டன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.



## நிவாரணப்பொதிகள் கையளிப்பு

ஹட்டன், எபோட்சிலி மொண்டிபெயார் தோட்டத்தின் லயக்குடியிருப்பில் ஏற்பட்ட தீ விபத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, மலையக தொழிலாளர் முன்னணியின் நிதிச்செயலாளர் புஸ்பா விஸ்வநாதனின் வேண்டுகோளுக்கு அமைய, பாராளுமன்ற உறுப்பினர் வீ. இராதாகிருஷ்ணனின் நிதியொதுக்கீட்டில் நிவாரணப் பொதிகள் கையளிக்கப்பட்டன. (நீலமேகம் பிரசாந்த்)

கோணக்கலை தமிழ் மகா வித்தியாலயத்தின்

# புதிய அதிபர் கடமைகளை பொறுப்பேற்றார்



ராமு தனராஜா

பது- கோணக்கலை தமிழ் மகா வித்தியாலயத்திற்கு நியமிக்கப்பட்ட புதிய அதிபரான ராஜேந்திரன் நேற்று (18) சுபவேளையில் தனது கடமைகளை பொறுப்பேற்றதோடு, பாடசாலை வளாகத்தில் மரக்கன்றையும் நட்டார்.

அத்துடன், புதிய அதிபரை பாடசாலையின் ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள், மாணவர்கள் அனைவரும் வரவேற்றனர்.

முன்னாள் அதிபர் நவரட்ணராஜா ஓய்வு பெற்று சென்றமையை தொடர்ந்து, மிக நீண்ட நாள்களுக்குப் பின்னர் குறித்த பாடசாலைக்கு அதிபராக ராஜேந்திரன் நியமிக்கப்படுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## தமிழக நிவாரணங்கள்...

தமிழக அரசாங்கத்தால் இலங்கைக்கு வழங்கப்பட்ட நிவாரணப் பொதிகள், நேற்று (18) காலை 10 மணிக்கு ஹப்புத்தளை ரயில் நிலையத்தில் இறக்கப்பட்டன.

ரயில் மூலம் கொண்டு செல்லப்பட்ட 4,500 கிலோ கிராம் அரிசி, ஹப்புத்தளை ரயில் நிலையத்தில் இறக்கப்பட்டது. ஹல்தும்முல்ல பிரதேச செயலாளர், ஹல்தும்முல்ல பிரதேச சபையின் தவிசாளர் ஆகியோர் இதனை பொறுப்பேற்றனர். (ராமு தனராஜா)

பசறையில் 14 மாணவர்கள்

# குளவிக்கொட்டுக்கு இலக்கு

ராமு தனராஜா

பசறை தமிழ் தேசிய பாடசாலையில் கல்வி கற்கும் 14 மாணவர்களும் இரண்டு ஆசிரியர்களும், குளவிக்கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

தரம் 1,2 இல் கல்வி கற்கும் மாணவர்கள் 14 பேரும் ஆசிரியர்கள் இருவருமாக மொத்தமாக 16 பேர் குளவி கொட்டுக்கு இலக்காகி, பசறை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவம் நேற்று (18) காலை சுமார் 11.00 மணியளவில் இடம்பெற்றுள்ளதோடு, பாடசாலை வளாகத்தில் இருந்த குளவி கூட்டிலிருந்த குளவிகளே, இவ்வாறு மாணவர்களையும் ஆசிரியர்களையும் கொட்டியுள்ளன.

கண்டியில் ஹோட்டலொன்றில் உணவு சாப்பிட்ட

# 600 பேர் சுகவீனம்

## சுகாதாரப் பிரிவினரால் விசாரணைகள் ஆரம்பம்

ஷேன் செனவிரத்ன

கண்டி, அம்பிட்டிய பிரதேசத்தில் உள்ள பிரதான ஹோட்டல் ஒன்றில் நடைபெற்ற பல திருமண நிகழ்வுகளில் கலந்து கொண்ட சுமார் 600 பேர் திடீரென சுகவீனமடைந்த சம்பவம் தொடர்பில் கங்கவத்தகோரல உள்ளூராட்சி சபையின் சுகாதார பிரிவினர் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அந்த ஹோட்டலில் சில நாள்களுக்கு முன்னர் மூன்று திருமண விழாக்கள் நடந்ததால், அந்த மூன்று திருமண விழாக்களிலும் கலந்து கொண்ட சுமார் 600 பேர் வாந்தி, பேதி, காய்ச்சலால் பாதிக்கப்பட்டு தனியார் மற்றும் அரசாங்க மருத்துவமனைகளில் சிகிச்சை பெற வேண்டிய நிலை ஏற்பட்டது.

கண்டியைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் ஒருவரின் குடும்பஸ்தர் ஒருவரின் திருமண வைபவமும் குறித்த ஹோட்டலில் இடம்பெற்றதுடன் திருமணம் முடித்த தம்பதியினர் தேனிலவுக்காக வெளிநாடு சென்றிருந்த நிலையில் அங்கு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் கங்கவத்தகோரல உள்ளூராட்சி சபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது, ஹோட்டலில் சாப்பிட்டவர்களுக்கு ஒருவித ஒவ்வாமை ஏற்பட்டுள்ளது. ஹோட்டல் நீரால் ஒவ்வாமை ஏற்படக்கூடும் என சந்தேகிப்பதால், ஹோட்டலின் நீர் மாதிரிகள் மேலதிக பரிசோதனைகளுக்காக பேராதனை பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இந்தசச் சம்பவங்கள் இடம்பெற்று சில நாள்களின் பின்னர், சம்பவம் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளமையால் விசாரணைகளை முன்னெடுப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

யட்டவத்தையில்

# தலைமைத்துவ பயிற்சி வேலைத்திட்டம்

மஹேஸ் கீர்த்திரத்ன

அரச அதிகாரிகளின் தலைமைத்துவ பண்பினை மேம்படுத்துவதற்கான தலைமைத்துவ பயிற்சி வேலைத்திட்டமானது, அண்மையில் மாத்தளை, யட்டவத்த பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

உடரட்ட மரபுகளை பாதுகாக்கும் அமைப்பின் பிரதானியான எம்.பி.டபிள்யூ சிரோமணியின் பங்களிப்புடன் நடைபெற்ற இப்பயிற்சி திட்டத்தில் யட்டவத்த பிரதேச செயலக அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.



# கட்சிகளில் பிளவுகளுக்கு வழிசமைக்கும் சர்வகட்சி அரசாங்கம்

சிங்கள-பௌத்த சிந்தனைகளைக் கொண்ட இருபெரும் கட்சிகளும் தமிழர் பிரதேசங்களில் போட்டியிட்டால், தென்னிலங்கையில் கிடைக்கும் வாக்குகள் கிடைக்காமல் போகும், வடக்கு, கிழக்கில் எதிர்பார்க்கப்பட்ட வாக்குகள் கிடைக்காது என்பதை யூகித்துக்கொண்டுதான், பெரும் கட்சிகளுடன் இருந்த சிறுபான்மையின கட்சிகள் தனிதனியே வடக்கு, கிழக்கில் கடந்தகால தேர்தல்களில் களமிறக்கப்பட்டன.

இந்த வியூகத்தை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா வகுத்தார் என்றும், தற்போதைய சூழ்நிலையில் அந்த வியூகம் பொருத்தமானது அல்லவென்பது பொதுவான அபிப்பிராயமாகும். அதனால், சிறுபான்மையின கட்சிகளை தனித்து களமிறங்கச் செய்து, பேரம்பேசிக் கொண்டிருப்பதை விட, இணைத்துக்கொண்டு களமிறங்க செய்வதை பற்றியே பெரும் கட்சிகள் சிந்திக்கின்றன.

பல கட்சிகள் ஒன்றிணைந்தே கூட்டணிகளை அமைத்துள்ளன. பொதுவான பிரச்சினையின் போது, பொது இணக்கப்பாட்டை எட்டிக்கொள்வதில் அவ்வாறான கட்சிகள் தடுமாறுகின்றன. அல்லது பதவிக்காக, பிரிந்துச் செல்லவேண்டிய நிர்ப்பந்தத்தில் பலரும் இருக்கின்றனர்.

அரசியல் குழப்பத்துக்குப் பின்னர், எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் ஒருசிலரைத் தவிர, வேறெவரும் தலைநிமிர்ந்து தங்களுடைய தொகுதிக்குச் செல்லமுடியாத நிலையில் இருக்கின்றனர். ஆக, அமைச்சுப்பதவியை பெற்றுக்கொள்ளும் நோக்கிலேயே ஒவ்வொருவரும் காய்களை நகர்த்திக்கொண்டிருக்கின்றனர்.

இந்நிலையில்தான், புதிய அமைச்சரவையை நியமித்துக்கொள்வது தொடர்பிலான பேச்சுக்கள் பரவலாக அடிபடுகின்றன. எதிர்க்கட்சிகளில் ஒருசில கட்சிகளும், தனிநபர்களும் சர்வகட்சி அரசாங்கத்துக்கு ஆதரவளிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் நிற்கின்றனர்.

தங்களுடைய தொகுதி மக்களுக்கு ஏதாவதொன்றை செய்தே ஆகவேண்டும். பதவிகள் இன்றி அதனைச் செய்யமுடியாது. ஆகையால், சர்வகட்சி அரசாங்கத்தில் இணைவதே பொருத்தமானது என நினைக்கின்றனர்.

இந்நிலையில், நிரந்தரமான அரசாங்கமொன்றை அமைக்க, எதிரணியில் இருக்கும் கட்சிகளை உடைத்து சின்னாபின்னமாக்கும் முயற்சிகளில் ஆளும் தரப்பினர் ஈடுபட்டுள்ளதாகவும் அறியமுடிகின்றது. பாராளுமன்றத்தில் ஜனாதிபதியை தெரிவுச் செய்வதற்காக நடத்தப்பட்ட வாக்கெடுப்பின் போது, தனிநபர்களுடன் நடத்தப்பட்ட பேரம்பேச்சின் மூலமாகவே, வெற்றி நிர்ணயிக்கப்பட்டதாகவும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

சர்வகட்சி அரசாங்கத்தை நிறுவுவது காலத்தின் கட்டாயமாகும். இன்னும் இரண்டரை வருடங்களுக்கு ஆட்சியை நகர்த்திச் செல்வதற்கு ஸ்திரமான ஆட்சியொன்று அவசியமாகும். அதனால்தான், கூட்டணிகளுக்குள் இருக்கும் கட்சிகள், தனித்துச் சென்று அரசாங்கத்துடன் கைக்கோர்த்துக்கொள்ளவும் முயற்சிப்பதாக அறியமுடிகின்றது.

எதிரணியில் இருப்பதன் ஊடாக மக்களுக்கு போதுமான சேவைகள் செய்யமுடியாது. ஏதாவது ஒரு வழியை கடைப்பிடிக்கவே வேண்டும். மாகாண சபைகள் செயலிழந்துள்ளன. உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலங்களும் நீடிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான நிலைமையொன்று தொடருமாயின் சிறு,சிறு கட்சிகளின் இருப்பு கேள்விக்குறியாகிவிடும். என்றாலும் கூட்டணிகளுக்குள் பொதுவான இணக்கப்பாடு எட்டப்படவேண்டும் என்பதே எமது அபிப்பிராயமாகும்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

சில நபர்கள், நிதானம் இல்லாமல் பேசுவார்கள். அவர், எதைச் சொல்ல விரும்புகின்றார் என்பது கூடத் தெரியாத நிலையில், முன்னுக்குப்பின் பேசுவது விசித்திரமாக இருக்கும்.

இவர்கள் குடிபோதையில் இல்லாது விட்டாலும், பேசும் முறைகள் தெரியாமல் இருக்கும். இத்தகையவர்கள் பற்றி அறிந்திருப்பீர்கள். இப்படிப் பேசுபவர்களைப் பொறுமையுடன் கேட்கவேண்டும். வெறுக்க வேண்டிய அவசியமில்லை. எல்லோரும் ஒரே மாதிரியானவர்கள் இல்லை.

இன்னும் சிலர், மிகப்பெரிய ஆழமான விடயங்களைப் பற்றி, சமானிய கல்வியறிவு குறைந்தவர்களிடம் பேசுவார்கள். புரியாத விடயங்களைப் புரிந்தவர் பேசினால், அவர்களுக்கு செவியில் ஏறுமா?

மேலும் சில நபர்கள், எந்த நேரத்திலும் தெரியாத மனிதர்களைக் கேலியுடன் நோக்கி, அவர்களின் கோபத்தை வலிந்து கைப்பற்றுவார்கள். தன்னைவிட எவரும் இல்லை என்பது போல, அவமானப்படும் விதமாகப் பேசுவது, நாகரிகமே இல்லாத செயல்.

மனிதர்களில் பலரகம் உண்டு. இவர்களுக்குள் நாமும் ஒருவர். ஒருவரை ஒருவர் புறக்கணிக்காமல், லாவகமாகப் பழகுவதே ஒரு கலை.; பொறுமை காக்கவும்.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

---

சர்வதேச நாணய நிதியம்:

# தரித்திரத்தின் சரித்திரம்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கை, இன்னொருமுறை கையேந்துவது என்று முடிவாகி, நீண்ட காலமாகிவிட்டது. எப்போது அக்கடன் கிடைக்கும் என்பதே, இப்போதைய பிரச்சினை.

இதற்கு முன் 16 தடவைகள் இலங்கை கடன் வாங்கியதே, அக்கடனினால் இலங்கையால் அந்நியக் கடனை அடைக்க முடிந்ததா அல்லது, இலங்கை மேலும் கடனாளியாகியதா என்ற வினாவை எழுப்புவோர் யாருமில்லை.

கடந்த காலத்தில், சர்வதேச நாணய நிதியத்திடம் வாங்கப்பட்ட கடனால் ஏற்பட்ட மாற்றங்கள் என்ன என்பது பற்றிப் பேசுவாரில்லை.

இலங்கையின் அந்நியக் கடன் பற்றியும் பொருளாதார நெருக்கடி பற்றியும், பேசுவோர் பேசாமல் தவிர்க்கின்ற சில விடயங்கள் உண்டு. அவை, முக்கியமானவை.

இந்த நாட்டின் இன்றைய நெருக்கடிக்கான காரணங்களை, கடந்த சில ஆண்டுகளின் நிகழ்வுகளில் மட்டும் விசாரித்தறிய இயலாது. எனினும், எதிர்க்கட்சிகளும் ஆய்வாளர்களும் அனைத்து பொருளாதாரப் பிரச்சினைகளையும், 2020இல் தெரிவான அரசாங்கத்தின் தலையில் சுமத்த முற்படுகின்றனர். இந்நெருக்கடியில், அவ்வரசாங்கத்துக்கு முக்கிய பங்குண்டு என்பதில் மறுப்பில்லை.

ஆனால், அடிப்படையான சில கோளாறுகள், இந்த நாட்டை நுகர்வுப் பொருளாதாரத்தினுள் தள்ளி, தேசிய உற்பத்திகளுக்கு குழி பறித்து, அந்நியக் கடன்களுக்கு உட்படுத்திய அனைத்து அரசாங்கங்களுக்கும் உரியன; இது வசதியாக மறக்கப்படுகிறது.

இன்றைய நெருக்கடிக்கு, உடனடிக் காரணியாக உள்ள அந்நியச் செலாவணி நெருக்கடியை எடுத்து நோக்கினால், இந்த நாட்டின் உழைப்பாளர்களில் ஐந்தில் ஒருவர், நேரடியாக அல்லது மறைமுகமாக ஓர் அந்நிய நாட்டுக்காக உழைக்கின்றனர். இது இரண்டு அடிப்படையான தாக்கங்களை ஏற்படுத்துகிறன .

ஒருபுறம், உள்நாட்டுத் தொழில் விருத்தி தடைப்படுகிறது. மறுபுறம், இது அயல் உழைப்பு வருமானத்தில் முற்றாக தங்கியிருக்கும், பலரைக் கொண்ட ஒரு சமூகமாக நம்மை உருமாற்றியுள்ளது.

இத்தோடு, தொடர்புடையதாக அந்நியச் செலாவணிக்கு இன்னொரு பரிமாணமும் உண்டு. அது நீண்ட போரின் விளைவால் தோற்றம்பெற்ற ஒரு புலம்பெயர் சமூகம். இப்பின்னணியிலும் எழுகின்ற கேள்வி யாதெனில், இவ்வாறு பல்முனைப்பட்ட அந்நியச் செலாவணி வருமானம், நாட்டுக்கு இருந்தபோதும் இந்தப் பங்களிப்பில் எவ்வளவு நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு உதவியுள்ளது? இந்த அந்நியச் செலாவணி எங்கு செலவிடப்படுகிறது? ஏன் செலவிடப்படுகிறது? இவையிரண்டும் பின்தொடரும் கேள்விகள்.

எமது அந்நியச்செலாவணியில் பெரும்பகுதி, இறக்குமதியில் செலவாகிறது. இதற்கு அடிப்படையான காரணம், எம்மிடம் உட்பொதிந்துள்ள நுகர்வுப் பண்பாடு. திறந்த பொருளாதாரத்தின் அறிமுகத்தோடு உடன்பிறந்த உலகமயமாக்கல், இந்நுகர்வை புதிய தளத்துக்கு நகர்த்தியுள்ளது.

இன்று நாம், அர்த்தமற்ற ஒரு நுகர்வுப் பழக்கத்துக்கு அடிமைப்பட்டுள்ளோம். அதன் துணை விளைவுகளாகவே உணவு இறக்குமதியின் பெருக்கமும் தனியார் கல்வியும் தனியார் மருத்துவமும் கட்டுபாடின்றி பெருகும் ஆடம்பரப் பொருட்களின் நுகர்வும் அமைகின்றன. இவையனைத்துக்கும் அந்நியச்செலாவணியே பயன்படுகிறது.

எமது அடிப்படையான பொருளாதார நிலைப்பாடுகளில் மாற்றம் தேவை. இந்த அடிப்படைச் சிக்கல்களைத் தீர்க்காமல், எந்தவொரு கடனும் பயன் தராது. ஆனால், இந்த மாற்றத்துக்கு அரசியல்வாதிகளோ, அரசாங்கமோ தயாராக இல்லை.

எல்லோருக்கும் இருக்கின்ற ‘ஆபத்பாண்டவன்’ சர்வதேச நாணய நிதியம். இதனிடம் கடன் வாங்கச் சொல்லிப் விதந்துரைக்கின்றவர்கள், இதுவரை உலகில் எந்த நாட்டை, சர்வதேச நாணய நிதியம் கடனில் இருந்து மீட்டது என்ற தகவலைச் சொல்வார்களா? சர்வதேச நாணய நிதியத்தால் மீட்கப்பட்ட நாடென்று, எதுவுமில்லை. இரண்டு நாடுகளை உதாரணமாகக் காட்ட முடியும்.

முதலாவது நாடு உக்ரேன். 2014இல், சர்வதேச நாணய நிதியத்திடம் உக்ரைன், 17 பில்லியன் அமெரிக்க டொலரை கடனாக வாங்கியது. இதற்காக விதிக்கப்பட்ட கட்டமைப்பு மாற்றங்களில், இரண்டு பிரதானமானவை.

முதலாவது, அரசுக்குச் சொந்தமான விளைநிலங்களைத் தனியாருக்கு விற்பனை செய்வதும், தனியாரின் நிலக் கொள்வனவு தொடர்பான கட்டுப்பாடுகளை நீக்குவதும் ஆகும்.

இரண்டாவது, உக்ரேன் உயிரியல் தொழிநுட்ப விவசாயம் (biotech farming) மரபணுமாற்றப்பட்ட பயிர்ச்செய்கை, மான்சாண்டோவின் நச்சு பயிர்கள், இரசாயனங்கள் விற்பனை ஆகியவற்றுக்கு அனுமதியளித்தல் ஆகியனவாகும்.

இதன்மூலம் பல்தேசியக் கம்பெனிகளுக்கான வாயில்கள் திறக்கப்பட்டன. இதன் மூலம், ஐரோப்பா முழுவதிலும் மிகவும் பழைமையான ஒரு விவசாய நிலம் அழிக்கப்பட்டது. இதற்கு, உக்ரேனிய அரசாங்கம் உடன்பட்டது. அந்த அரசாங்கமும், ஓர் அமெரிக்கச் சதியின் விளைவால் ஆட்சிக்கு வந்தது என்பதும் கவனிப்புக்குரியது.

சர்வதேச நாணய நிதியக் கடனைத் தொடர்ந்து, உக்ரேனில் நடைமுறைப்படுத்தப்பட்ட கட்டமைப்பு மாற்றங்களின் விளைவால், மான்சாண்டோ, பிளாக்ராக், வான்கார்ட் ஆகியவை 20 மில்லியன் ஹெக்டேருக்கு மேற்பட்ட நிலங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. சுருக்கமாகச் சொல்வதாயின் இந்நிறுவனங்கள், உக்ரேன் விளைநிலங்களில் 70 சதவீதத்துக்கு மேற்பட்டதை வாங்கியுள்ளன. ஐரோப்பாவில் மிகவும் வளமான மண், இப்போது பல்தேசியக் கம்பெனிகளுக்குத் திறக்கப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து, இன்னும் கடன்களை வழங்க சர்வதேச நாணய நிதியம் உடன்பட்டது. அதற்கு மாற்றாக, உக்ரேன் ஓய்வூதியம், எரிபொருள் மானியங்களைக் குறைக்க வேண்டும். இதனை, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் எரித்தார். சர்வதேச நாணய நிதியம் வழங்க உடன்பட்ட கடன்தொகையை, எதுவித முன்நிபந்தனைகளின்றி வழங்க முன்வந்தது ரஷ்யா. இதைத் தொடர்ந்து நடந்தவைக்கும், இப்போதைய போருக்கும் நெருங்கிய தொடர்புண்டு.

இரண்டாவது உதாரணம், ஆர்ஜென்ரீனா. சர்வதேச நாணய நிதியக் கடன் ஆர்ஜென்ரீனாவில் தோற்றுள்ளதாக, இவ்வாண்டு தொடக்கத்தில் அந்த நிறுவனமே ஏற்றுள்ளது. இது பற்றி எந்த ஊடகமும் ஆய்வாளரும் சொல்லவில்லை.

ஆர்ஜென்ரீனாவின் கதை, தனியே அதற்கு மட்டும் உரியதல்ல. இது முழு மூன்றாமுலகுக்கும் உரியது. குறிப்பாக, கடந்த நூற்றாண்டில் தென்அமெரிக்காவில், கடன் என்ற போர்வையில் சர்வதேச நாணய நிதியம் இழைத்த கொடுமைகள் ஏராளம். குறிப்பாக, 1990களில் தென்அமெரிக்காவில் உலகமயமாதலும் திறந்த பொருளாதாரமும் தீவிரமாக நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து, ‘கட்டமைப்புச் சீராக்கம்’ எனப்படும் அரச நிர்வாகத் துறையைக் கட்டுப்படுத்தலும், அரசதுறைகளைத் தனியார் மயமாக்கலும் தொடர்ந்தன.

பலநாடுகளில், சர்வதேச நாணய நிதியம் பொருளாதாரக் கொள்கைகளை ஒழுங்குபடுத்திக் கட்டமைக்கும் பணியில் ஈடுபட்டது. இவ்வாறு, சர்வதேச நாணய நிதியத்தால் வடிவமைக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கைகளைக் கொண்டதொரு நாடு ஆர்ஜென்ரீனா.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில், ஆர்ஜென்ரீனா, கடும் பொருளாதார நெருக்கடிக்கு உட்பட்டது. சர்வதேச நாணய நிதியக் கடன் உட்பட, பல கடன்களையும் தீர்க்க இயலாது மக்கள் மீது மேலும் சுமைகளை ஏற்றிய ஒரு நிலையில், அங்கு ஆட்சிமாற்றமொன்று நடைபெற்றது.

இடதுசாரிப் போக்கான புதிய அரசாங்கம், எந்தக் கடனையும் வட்டியையும் மீளச் செலுத்துவதில்லை என்ற முடிவை மிகத் தெளிவாக எடுத்தது. இதன் விளைவால், ஆர்ஜென்ரீனா மீது கடுமையான சர்வதேச அழுத்தங்கள் ஏவப்பட்டன. ஆனால், பலவாறான சர்வதேச அழுத்தங்கையும் மீறி, ஆர்ஜென்ரீனாவின் பொருளாதாரம் சிறிது சிறிதாக நெருக்கடியில் இருந்து மீண்டது.

ஆதன் பின்னர், நெருங்கிய நட்பு நாடான வெனிசுவேலாவின் உதவியுடன், சர்வதேச நாணய நிதியத்திடம் வாங்கிய கடனை முழுமையாக அடைத்ததோடு, சர்வதேச நாணய நிதியத்திடம் இனிமேல் கடன் வாங்குவதில்லை என்ற முடிவையும் எடுத்தது. ஆனால், இது நீண்டகாலம் நிலைக்கவில்லை. ஒரு சதியின் விளைவால், தீவிர வலதுசாரி அரசாங்கம் பதவிக்கு வந்தது.

புதிய ஜனாதிபதியின் முதல் காரியங்களில் ஒன்று, சர்வதேச நாணய நிதியத்திடம் கையேந்தியமை ஆகும். ஆர்ஜென்ரீனா நாட்டுக்குள் மீண்டும் சர்வதேச நாணய நிதியம் நுழைந்தது. மிகக்குறுகிய காலத்தில், அந்நாட்டின் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது, சமூக நலவெட்டுகள் வரைமுறையின்றி நடைமுறைப்படுத்தப்பட்டன. இன்று, இலங்கை போன்று வங்குரோத்து நிலையில் ஆர்ஜென்ரீனா உள்ளது. இப்போது மீண்டும் சர்வதேச நாணய நிதியத்திடம் கையேந்துகிறார்கள்.

இதன் பின்னணியிலேயே, சர்வதேச நாணய நிதியம், ஆர்ஜென்ரீனாவில் தோல்வியடைந்ததை தொடர்ந்து வழங்கிய ஒப்புதல் வாக்குமூலத்தை நோக்க வேண்டும். சர்வதேச நாணய நிதியம், ‘ஆபத்பாண்டவனோ’, ‘இரட்சகனோ’ இல்லை. இந்த உண்மை விளங்காவிடின், இன்னலில் தொடர்ந்தும் உழல்வதற்கு நாம் கடமைப்பட்டவர்கள்.

---

## கடிதங்கள்

### ஆபத்தான வழியில் மக்கள் பயணம் தொடர்கிறது...

மஸ்கெலியா - நல்லத்தண்ணிபிரதான வீதியில், மோகினி எல்ல பகுதியில் ஏற்பட்ட மண் சரிவு காரணமாக, மஸ்கெலியா - நல்லத்தண்ணிவீதியில் சேவையில் ஈடுபட்டு வரும் தனியார், அரச பஸ்கள், மோகினி எல்ல பகுதியில் நிறுத்தப்படுவதால், அந்த இடத்தில் இருந்து பயணிகள் இறங்கிச் செல்லும் வழி மிகவும் ஆபத்தானதாக உள்ளது.

சறுக்கலும் சேறும் சகதியுமான வழியால், மேட்டு நிலப்பகுதிக்கு ஏற வேண்டிய நிலையில் காணப்படுவதால், அப்பகுதியில் உள்ள மக்கள், பயணிகள், பாடசாலை மாணவர்கள், அரச ஊழியர்கள், பாதுகாப்பு பிரிவினர் எனச் சகல தரப்பினரும், மிகவும் சிரமபட்டு வருகின்றனர். இது குறித்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் கவணம் செலுத்தி, நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கையையும் முன்வைக்கின்றார்கள்.

மஸ்கெலியா பிரதேச சபை முன் வந்து, இதற்குத் தீர்வு பெற்று கொடுக்க வேண்டும் என, பாதிப்புக்கு உள்ளாகி வரும் பாடசாலை மாணவர்கள், கோரிக்கை விடுக்கின்றனர்.

சறுக்கலும் சேறும் சகதியுமான வழியால், மேட்டு நிலப்பகுதிக்கு ஏற வேண்டிய நிலையில் காணப்படுவதால், அப்பகுதியில் உள்ள மக்கள், பயணிகள், பாடசாலை மாணவர்கள், அரச ஊழியர்கள், பாதுகாப்பு பிரிவினர் எனச் சகல தரப்பினரும், நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கையையும் முன்வைக்கின்றார்கள்.

செ. தி பெருமாள்

SLT–MOBITEL இடமிருந்து

# ‘Traverse’ அறிமுகம்

SLT-MOBITEL, இலங்கையின் முதலாவது மெய்நிகர் நகரான ‘Traverse’ ஐ ‘Wyawasaya-2022’ வர்த்தக மற்றும் கல்விக் கண்காட்சியில் அண்மையில் அறிமுகம் செய்திருந்தது.

‘எதிர்காலத்துக்கான நகரம்’ என அறிவிக்கப்பட்டுள்ள Traverse, நேரடி மற்றும் டிஜிட்டல் அனுபவங்களை இணையத்தில் ஒன்றிணைத்து, சர்வதேச மற்றும் வரையறைகளற்ற கைகோர்ப்புக்கான வாய்ப்புகளை வழங்கும் வகையில் அமைந்திருக்கும்.

வளர்ச்சிக்கான சிறப்பான வாய்ப்பை வழங்குவதாக ‘Traverse’ அமைந்திருக்கும் என்பதுடன், வேகமாக வளர்ந்து வரும் டிஜிட்டல் பொருளாதாரத்தில் தமது பொருத்தப்பாட்டை மேம்படுத்திக் கொள்வதற்கு, இலங்கை வியாபாரங்களுக்கு சிறந்த புத்தாக்கத்தை வழங்குவதாகவும் அமைந்திருக்கும்.




Virtual Reality, Virtual Marketplaces, Digital Assets மற்றும் Non-Fungible Tokens அல்லது NFTகளால் பிரத்தியேகமான வாடிக்கையாளர் அனுபவங்களைப் பெற்றுக் கொடுக்கப்படுவதுடன், உள்நாட்டு பொருளாதார வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்ல ஏதுவாக அமைந்துள்ளன.

சொப்பிங் தொகுதிகள், வங்கிகள், மெய்நிகர் கண்காட்சி நிலையம், திரையரங்கு, கேமிங் வலயம், அரசாங்க e-counterகள், கலைப் பகுதிகள் போன்றன ‘Traverse’ இல் அடங்கியிருக்கும். வியாபார உரிமையாளர்களுக்கு, தமது தேவைகளின் பிரகாரம் மெய்நிகர் சந்தைப்பகுதிகளிலிருந்து தமக்கு அவசியமான பகுதிகளை கொள்வனவு அல்லது வாடகைக்கு பெற முடியும்.

உள்நாட்டு வியாபார சமூகத்துக்கு சிறந்த பெறுமதியை சேர்க்கும் வகையில், மெய்நிகர் நகரால், தந்திரோபாய பங்காண்மைகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும், இலாபகரத்தன்மையை இதுவரை இனங்காணப்படாத வருமானமீட்டும் வழிமுறைகளினூடாக பெற்றுக் கொள்வதற்கும் உதவிகள் வழங்கப்படுகின்றன. மேலும், விலைச் சிக்கனமான, அளவிடக்கூடிய மற்றும் நுட்ப முறைகளைக் கொண்டு குறைந்த முதலீட்டு மற்றும் குறைந்த பராமரிப்பு செலவுகளுடன் சர்வதேச பார்வையாளர்களை உள்நாட்டு வியாபாரங்களுக்கு சென்றடையக்கூடியதாக இருக்கும். இலங்கையின் தயாரிப்புகள் மற்றும் சேவைகளுக்கு மெய்நிகர் நகரினூடாக சர்வதேச சந்தைப்பகுதிக்கான அணுகல் உருவாக்கப்படுவது மேலதிக அனுகூலமாக அமைந்துள்ளது.

டிஜிட்டல் மாற்றியமைப்பு சேவை வழங்குநராக அறியப்படும் SLT-MOBITEL, நாட்டின் முதல் மெய்நிகர் நகர அனுபவம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் அனுகூலங்களில், நீண்ட காலம் நிலைத்திருக்கும் வெளிப்படுத்தல் பரந்தளவு சந்தைப்பகுதிக்கு காணப்படுவதுடன், வெபினார்கள் மற்றும் நேரலை chatகள், சகல கட்டமைப்புகளையும் இலகுவாக அணுகுவது, செயலிலுள்ள பகுப்பாய்வுகளினூடாக சலுகை வழங்கல்களை ஊக்குவிக்கும் நெகிழ்ச்சித்தன்மை போன்றன அடங்கியுள்ளன.

‘மெய்நிகர் நகர், அறிமுகம் செய்யப்பட்டு அதில் SLT-MOBITEL இன் பங்களிப்பு புத்தாக்க மற்றும் டிஜிட்டல் சேவை வழங்குநர் எனும் வகையில், புரட்சிகரமான தொழில்நுட்பங்களைக் கொண்டு நாட்டின் முதல் மெய்நிகர் சந்தைப்பகுதியை முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமான வழிகாட்டல்களை வழங்குகின்றது.

# செலான் வங்கி ஹேலீஸ் சோலருடன் கைகோர்ப்பு

வாடிக்கையாளர்கள் சௌகரியமான தீர்வுகள் மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொள்வதை உறுதி செய்து, அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு பங்களிப்பு வழங்கும் வகையில் ஹேலீஸ் சோலருடன் செலான் வங்கி பங்காண்மையில் கைச்சாத்திட்டுள்ளது. இதனூடாக, சூரிய மின்பிறக்கல் கட்டமைப்புகளை கொள்வனவு செய்வதற்கான, இலகு தவணை முறை மீளுச் செலுத்தும் வசதியை செலான் அட்டைதாரர்களுக்கு வழங்க முன்வந்துள்ளது.



நாட்டில் தற்போது நிலவும் எரிபொருள் நெருக்கடி நிலை காரணமாகவும், அதிகரித்துச் செல்லும் மின்சார கட்டணங்களின் காரணமாகவும், சூரிய மின்சக்தி சிறந்த பொருத்தமான மாற்றுத் தீர்வாக அமைந்துள்ளது. எவ்வாறாயினும், சூரியபடல்களைப் பொருத்துவதற்கான உயர்ந்த கட்டணங்கள் காரணமாக மக்கள் இந்த மாற்றுத் தீர்வை பயன்படுத்த முன்வருவதில்லை. ஹேலீஸ் சோலருடன் செலான் வங்கியின் பங்காண்மையினூடாக, பொது மக்களுக்கு சூரிய மின்வலுவுக்கு மாறிக் கொள்வது சகாயமான தெரிவாக்கப்பட்டுள்ளது.

செலான் அட்டைகளுக்கான இலகு தவணை முறை கொடுப்பனவில் 0% வட்டியில்லாத மீளச் செலுத்தல்கள் 3 மாதங்கள், 6, 12 மற்றும் 24 மாதங்கள் வரை ஆகக் குறைந்தது 10,000 ரூபாய் முதல் 1 மில்லியன் ரூபாய் வரை வழங்கப்படுகின்றது. கொடுக்கல் வாங்கலை மேற்கொண்டு 7 நாள்களுக்குள் வங்கியின் ஹொட்லைன் இலக்கமான 0112008888 உடன் தொடர்பு கொண்டு, இலகு தவணை முறை மீளச் செலுத்தும் வசதிக்கு மாற்றிக் கொள்ள முடியும்.

இந்தப் பங்காண்மை தொடர்பில் செலான் வங்கியின் அட்டைகள் பிரிவின் தலைமை அதிகாரி ருச்சித் லியனகே கருத்துத் தெரிவிக்கையில், “அத்தியாவசிய தேவைகளுக்கான, அத்தியாவசிய அட்டையான செலான் கார்ட்ஸ், எமது வாடிக்கையாளர்களின் அத்தியாவசிய நிதித் தேவைகளை நிவர்த்தி செய்வது தொடர்பில் எப்போதும் கவனம் செலுத்துகின்றது. அவர்களுக்கு எவ்வாறு சௌகரியமான தீர்வுகளை வழங்க முடியும் என்பது தொடர்பான வழிமுறைகளை தொடர்ச்சியாக இனங்காண முயற்சி செய்கின்றோம். விசேடமாக இந்த நெருக்கயான காலப்பகுதியில், செலான் கார்ட்ஸ் ஊடாக, பரந்தளவு தீர்வுகள் மற்றும் சேவைகள் வாடிக்கையாளர்களின் நிதிச் சுமையை தணிக்கும் வகையில் வழங்கப்படுகின்றன. மேலும், நிலைபேறாண்மை அடிப்படையில், இந்த நடவடிக்கையினூடாக பெருமளவான மக்களுக்கு புதுப்பிக்கத்தக்க வலுவுக்கு மாறிக் கொள்ளக்கூடியதாக இருக்கும். இதனூடாக காபன் வெளியீட்டைக் குறைக்க முடியும் என்பதுடன், மசகு எண்ணெய் இறக்குமதிக்கான செலவைக் குறைத்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும். பொறுப்பு வாய்ந்த நிறுவனம் எனும் வகையில், இந்த நிலைபேறான வலு மூலங்களை பல இலங்கையர்களுக்கு அணுகக்கூடியதாக மாற்றியமைப்பது எமது கடமையாகும். அதனூடாக நீண்ட கால அடிப்படையில் வலுப் பிரச்சினைக்கு தீர்வு காணக்கூடியதாக இருக்கும்” என்றார்.

செலான் வங்கி மற்றும் ஃபென்டன்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் புதுப்பிக்கத்தக்க வலுப் பிரிவான ஹேலீஸ் சோலர் ஆகியவற்றுக்கிடையிலான பங்காண்மை என்பதனூடாக, இந்த இணைந்த செயற்பாட்டின் உறுதித்தன்மைக்கு வலுச் சேர்த்துள்ளன. புதுப்பிக்கத்தக்கவை மற்றும் வலு சேகரிப்பு கட்டமைப்புகள் போன்றவற்றில் ஹேலீஸ் சோலர் பிரதானமாக கவனம் செலுத்துகின்றது. ஒரு தசாப்த காலத்துக்கும் அதிகமான சந்தைச் சிறப்புடன் நிறுவனம் வெற்றிகரமாக 75MW சூரிய மின்பிறப்பாக்கல் கட்டமைப்புகளை நாடு முழுவதிலும் பொருத்தியுள்ளது. இதனூடாக இலங்கையில் பொறியியல், கொள்முதல் மற்றும் நிர்மாணம் (EPC) ஆகியவற்றில் ஒப்பற்ற முன்னோடியாக திகழ்கின்றது. ஹேலீஸ் சோலரினால் வழங்கப்படும் தீர்வான Energynet இனால் பரந்தளவு off-grid, hybrid மற்றும் battery backup கட்டமைப்புகள் வழங்கப்படுகின்றன.


புவனேஸ்வர்

ஒடிசாவில் வெள்ளப் பெருக்கு

# 237 கிராமங்களில் மக்கள் தவிப்பு

ஒடிசாவில் மகாநதியில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கால் கரையோர கிராமங்களில் வசிக்கும் ஒன்றரை இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் வெள்ளத்தில் சிக்கித் தவிக்கின்றனர்.

“மகாநதியில் வெள்ளம் தொடர்ந்து அபாய அளவுக்கு மேல் செல்வதால், கரையோர கிராமங்களில் வெள்ளம் புகுந்துள்ளது. இதனால் 237 கிராமங்களில் உள்ள ஒன்றரை இலட்சத்துக்கும் மேற்பட்டோர் வெள்ளத்தில் சிக்கித் தவிக்கின்றனர்.



மகாநதியில் உள்ள ஹிராகுட் அணையின் உயரம் 630 அடியாக உள்ள நிலையில், அதன் நீர்மட்டம் 626.47 அடியை எட்டியுள்ளது. அணையின் நீர்வரத்து வினாடிக்கு 6.24 இலட்சம் கனஅடியாக உள்ள நிலையில், வினாடிக்கு 6.81 இலட்சம் கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது.

மகாநதி படுகையில் உள்ள 10 மாவட்டங்களில் கடந்த ஒரு வாரமாக பெய்யும் மழையால் 1,366 கிராமங்கள் மற்றும் 9 நகரங்களில் வசிக்கும் 2 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் ஒடிசாவின் வடகடலோர 10 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

புதுடெல்லி

# தலாக் இ ஹசன் முறையை தடைசெய்யுமாறு மனு



முத்தலாக் விவாகரத்து முறையைத் தொடர்ந்து, தலாக் இ ஹசன் நடைமுறையையும் தடை செய்ய உத்தரவிட கோரி, உத்தரபிரதேச மாநிலம் காசியாபாத்தைச் சேர்ந்த பெண் பத்திரிகையாளர் பெனாசீர் ஹீனா, உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

முஸ்லிம்கள் பின்பற்றும் தலாக் இ ஹசன் விவாகரத்து முறையால், தான் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இந்த முறையால் பல பெண்களும் குழந்தைகளும் பாதிக்கப்படுவதாகவும் கூறி, முத்தலாக் விவாகரத்து முறையை தடை செய்தது போல, அதையும் தடை செய்ய வேண்டும் என மனுவில் கோரியுள்ளார்.

தலாக் இ ஹசன் என்பது, முத்தலாக் போன்ற மற்றொரு விவாகரத்து முறை ஆகும். முத்தலாக் முறையில், ஒரே நேரத்தில் மூன்று முறை `தலாக்’ என்று கூறி கணவன் - மனைவிக்கு இடையே விவாகரத்து மேற்கொள்ள முடியும். அதுவே தலாக் இ ஹசன் முறையில், 3 மாத காலத்தில், ஒவ்வொரு மாதமும் ஒரு முறை `தலாக்’ என்று கூறுவதன் மூலம் விவாகரத்து நடைமுறையை மேற்கொள்ளலாம்.

ஒருவேளை மூன்றாவது மாதம் `தலாக்’ சொல்வதற்குள் கணவன், மனைவி சமாதானம் செய்து கொண்டால், முன்னர் சொன்ன இரண்டு `தலாக்’குகளும் செயலிழந்துவிடும்.

இந்நிலையில், பொலிஸில் பெனாசீர் செய்துள்ள முறைப்பாட்டில், ஷரியா சட்டப்படி (இஸ்லாமியர்களுக்கான சட்டம்), அந்த முறை விவாகரத்து செல்லும் என்று கூறப்பட்டதாகத் தெரிகிறது. இந்நிலையில்தான், தலாக் இ ஹசன் நடைமுறையை தடை செய்ய வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார் பெனாசீர். இந்த வழக்கு நீதிபதிகள் சஞ்சய் கிஷண் கவுல் தலைமையிலான அமர்வு முன்பு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது.

அப்போது நீதிபதி சஞ்சய் கிஷண் கவுல் கூறும்போது, “ முஸ்லிம் பெண் ஒருவர் தன் கணவனிடம் இருந்து பெற்ற வரதட்சணை (மஹர்) அல்லது வேறு எதையாவது திருப்பித் தருவதன் மூலமோ அல்லது எதையும் திருப்பித் தராமலோ, வாழ்க்கைத் துணைவர்கள் அல்லது காதியின் (நீதிமன்ற) ஆணையின் மூலம் சூழ்நிலைகளைப் பொறுத்து விவாகரத்து பெற முடியும். ஆனால் தலாக்-இ-ஹசன் விவாகரத்து முறை அவ்வளவு முறையற்றதல்ல என்று தெரிய வருகிறது. எனவே, முஸ்லிம் பெண்களுக்கு மற்றொரு வாய்ப்பு உள்ளது. அதாவது, கணவர்களை விவாகரத்து செய்யும் குலா முறைதான் அது. நான் மனுதாரரின் முகாந்திரத்துடன் உடன்படவில்லை. வேறு எந்த காரணத்திற்காகவும் இது ஒரு நிகழ்ச்சி நிரலாக மாறுவதை நான் விரும்பவில்லை” என்றார்.

சென்னை

# நெல்லை கண்ணன் காலமானார்

தமிழ் இலக்கிய பேச்சாளரும், பட்டிமன்ற நடுவரும், ‘தமிழ்க்கடல்’ நெல்லை கண்ணன் திருநெல்வேலியில் உள்ள இல்லத்தில், வயது முதிர்வு காரணமாக காலமானார். இறக்கும் போது அவருக்கு வயது 77 ஆகும்.



நெல்லை கண்ணன், தமிழ் அறிஞராகவும் பட்டிமன்ற நடுவராகவும் பன்முகதன்மை கொண்ட ஆளுமையாளராக இவர் விளங்கினார். காங்கிரஸ் கட்சியில் நீண்ட நாள் பணியாற்றிய இவர், 1970ஆம் ஆண்டு முதல் மேடைகளில் பேசி வந்தார்.

குன்றக்குடி அடிகளாருடன் இணைந்து பட்டிமன்றங்களை அறிவார்ந்த விவாத தளங்களாக மாற்றியவர் நெல்லை கண்ணன். இவர் தமிழக அரசின் ‘இளங்கோவடிகள்’ விருதினை சமீபத்தில் பெற்றிருந்தார்.

அவரது உடலுக்கு பல்வேறு அரசியல் கட்சி பிரமுகர்கள், பொதுமக்கள், தமிழ் அறிஞர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

சென்னை

# பெண் இனத்துக்கு மாபெரும் அநீதி

குஜராத் கொலையாளிகள் முன்விடுதலை செய்யப்பட்டுள்ளதன் மூலம் பெண் இனத்திற்கு மாபெரும் அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழக (ம.தி.மு.க) பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து, “நரேந்திர மோடி முதலமைச்சராகப் பதவி வகித்த காலத்தில், கோத்ரா ரயில் நிலையத்தில், ரயிலின் பெட்டியை சில கயவர்கள் தீ வைத்ததால், 59 பயணிகள் உயிரோடு கருகிச் சாம்பல் ஆகினர்.

அதற்குப் பின்னர், குஜராத்தில் இஸ்லாமியர் கொல்லப்பட்டனர். முஸ்லிம் மக்கள் மீது இந்துத்துவ மதவெறிக் கும்பல் நடத்திய கொடூரத் தாக்குதலால் ஆயிரக் கணக்கானவர்கள் கொல்லப்பட்டனர். இஸ்லாமிய பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டனர் என்றார்.

சென்னை

# முதலிடத்தில் புதுடெல்லி

உலகில் காற்று மாசு அதிகமாக உள்ள நகரங்களின் பட்டியலை ஹெல்த் எஃபக்ட்ஸ் இன்ஸ்டிட்யூட் நிறுவனம் வெளியிட்டுள்ளது. அதில் புதுடெல்லி முதலிடத்தில் உள்ளது. கொல்கத்தா 2வது இடத்தில் உள்ளது.

உலகெங்கிலும் உள்ள கோடிக்கணக்கான மக்கள், உலக சுகாதார அமைப்பின் காற்றின் தர அளவை விட மாசு நிறைந்த காற்றை சுவாசிக்கின்றனர்.

காற்றில் இருக்கக்கூடிய பார்ட்டிகுலேட் மேட்டர், அதாவது தூசின் அளவு 2.5 விட்டமாக இருக்கிறது. சுவாசிக்கக்கூடிய அளவுள்ள துகள்கள் 10 மைக்ரான்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.



எனவே, அதை பி.எம். 10 என்கிறார்கள். இது ஒரு கியூபிக் மீற்றருக்கு 20 மைக்ரோகிராம் அளவுக்கு மட்டுமே இருக்க வேண்டும் என்பது உலகச் சுகாதார அமைப்பு விதி.

ஆனால், சமீபகாலமாக 2.5 மைக்ரான்களுக்கு மிகாமல் இருக்கும் சுவாசிக்கக்கூடிய அளவுடைய துகள்கள் பற்றி ஆய்வுகள் நடத்தப் பட்டுவருகின்றன. இந்த அளவை பி.எம் 2.5 (PM 2.5) என்கிறார்கள்.

முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில்

# நியூசிலாந்தை வீழ்த்திய மே. தீவுகள்



நியூசிலாந்துக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில், பார்படோஸில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற முதலாவது போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: மே. தீவுகள்

நியூசிலாந்து: 190/10 (45.2 ஓவ. ) (துடுப்பாட்டம்: கேன் வில்லியம்ஸன் 34 (50), மிஷெல் பிறேஸ்வெல் 31 (33) ஓட்டங்கள். பந்துவீச்சு: அகீல் ஹொஸைன் 3/28, அல்ஸாரி ஜோசப் 3/36, ஜேஸன் ஹோல்டர் 2/29, கெவின் சின்கிளேயர் 1/37, யன்னிக் கரியாஹ் 1/49)

மே. தீவுகள்: 193/5 (39 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஷமர்ஹ் ப்ரூக்ஸ் 79 (91), நிக்கலஸ் பூரான் 28 (47) ஓட்டங்கள். பந்துவீச்சு: டிம் சௌதி 2/39, ட்ரெண்ட் போல்ட் 2/49, மிற்செல் சான்ட்னெர் 1/25)

போட்டியின் நாயகன்: ஷமர்ஹ் ப்ரூக்ஸ்

இரண்டு அணிகளுக்கிடையிலான இரண்டாவது போட்டியானது இன்றிரவு 11.30 மணிக்கு நடைபெறவுள்ளது.



தென்னாபிரிக்காவுக்கெதிரான முதலாவது டெஸ்டில்

# தடுமாறும் இங்கிலாந்து

தென்னாபிரிக்காவு க்கெதிரான முதலாவது டெஸ்டில் இங்கிலாந்து தடுமாறுகிறது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், லோர்ட்ஸில் நேற்று முன்தினம் ஆரம்பமான இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்காவின் அணித்தலைவர் டீன் எல்கர், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து, ஆரம்பத்திலேயே ஆரம்பத் துடுப்பாட்டவீரர்கள் அலெக்ஸ் லீஸ், ஸக் க்றொலியை ககிஸோ றபாடாவிடம் இழந்து தடுமாறியது.

தொடர்ந்து சிறிது நேரத்தில் ஜோ றூட்டும் மார்கோ ஜன்சனிடம் வீழ்ந்ததுடன், அடுத்து வந்த ஜொனி பெயார்ஸ்டோவும் அன்றிச் நொர்ட்ஜேயிடம் உடனேயே வீழ்ந்தார்.

இந்நிலையில், ஒலி போப்பும், அணித்தலைவர் பென் ஸ்டோக்ஸும் இனிங்ஸை நகர்த்திய நிலையில் நொர்ட்ஜேயிடம் ஸ்டோக்ஸ் வீழ்ந்தார். பின்னர் குறிப்பிட்ட நேரத்தில் பென் போக்ஸும் நொர்ட்ஜேயிடம் வீழ்ந்ததோடு மழையால் முதல் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

அப்போது தமது முதலாவது இனிங்ஸில் 6 விக்கெட்டுகளை இழந்து 116 ஓட்டங்களை இங்கிலாந்து பெற்றிருந்தது. களத்தில் ஒலி போப் 61 ஓட்டங்களுடனும், ஸ்டூவர்ட் ப்ரோட் ஓட்டமெதுவும் பெறாமலும் இருந்தனர்.

## யுனைட்டெட் செல்லும் புலிசிச்?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான செல்சியின் முன்களவீரரான கிறிஸ்டியன் புலிசிச்சை இப்பருவகாலத்துக்கு கடனடிப்படையில் கைச்சாத்திடுவதற்கு இன்னொரு பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட் ஆர்வம் காட்டியுள்ளதாகக் கூறப்படுகிறது.

செல்சிக்காக 76 லீக் போட்டிகளில் விளையாடிய 23 வயதான புலிசிச், 19 கோல்களைப் பெற்றுள்ளார்.





## பரிஸ் ஸா ஜெர்மைன் செல்லும் சில்வா?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் சிற்றியின் மத்தியகளவீரரான பெர்ணார்டோ சில்வாவைக் கைச்சாத்திடுவதற்கு பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைன் பணியாற்றுவதாகக் கூறப்படுகிறது.

முன்னதாக 28 வயதான சில்வாவை ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனா கைச்சாத்திடப் போவதாகக் கூறப்பட்டிருந்தது.

சிற்றியுடன் எதிர்வரும் 2025ஆம் ஆண்டு வரையில் ஒப்பந்தத்தைக் கொண்டுள்ள சில்வாவுக்காக 70 மில்லியன் யூரோக்களைச் செலுத்த பரிஸ் ஸா ஜெர்மைன் தயாராகவுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஆப்கானிஸ்தான்

காபூலிலுள்ள பள்ளிவாசலில் குண்டு வெடிப்பு:

# மூவர் பலி

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலிலுள்ள பள்ளிவாசல் ஒன்றில், குண்டு வெடிப்பு ஒன்றை அடுத்து குறைந்தது மூவர் கொல்லப்பட்டதுடன், 27 பேர் காயமடைந்ததாக வைத்தியசாலை ஒன்று தெரிவித்துள்ளது.

இந்நிலையில், குண்டு வெடிப்பில் 20 பேர் கொல்லப்பட்டதாகவும், 40 பேர் காயமடைந்ததாகவும் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, குறைந்தது 10 பேர் கொல்லப்பட்டதாக ஏ.பி முகவரகம் தெரிவித்துள்ளது.



இந்நிலையில், இறந்தவர்களும், காயமடைந்தவர்களும் இருப்பதாக உறுதிப்படுத்திய தலிபான் அரசாங்கத்தின் பேச்சாளர் ஸபிஹுல்லாஹ் முஜாஹிட், எத்தனை பேர் எனக் குறிப்பிட்டிருக்கவில்லை.

இதேவேளை, பலர் கொல்லப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தபோதும் எத்தனை பேர் எனக் குறிப்பிட்டிருக்கவில்லை.



## நியூஸிலாந்தில் மழை

நியூஸிலாந்தின் தென் தீவை மூன்றாவது நாளாக நேற்று பருவமழை தாக்கியதில், நூற்றுக்கணக்கானோர் அவர்களின் வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டதுடன், வீதிகள் மற்றும் பாடசாலைகள் மூடப்பட்டதுடன், நிலச்சரிவுகளும் ஏற்பட்டுள்ளன.

வட கொரியா

## ஏவுகணைகளை ஏவிய வட கொரியா




கடலுக்குள் இரண்டு ஏவுகணைகளை வட கொரியா ஏவியுள்ளதாக தென் கொரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தென் பியொன்கன் மாகாணத்திலுள்ள ஒன்சொன்னிலிருந்து மேற்கு கடலுக்குள் இரண்டு ஏவுகணைகளை வட கொரியா ஏவியதை நேற்று முன்தினம் காலையில் கண்டுபிடித்ததாக யொன்ஹப் செய்தி முகவரகத்துக்கு பெயரிடப்படாத இராணுவ அதிகாரியொருவர் நேற்று முன்தினம் கூறியுள்ளார்.

தென்கொரியாவும், ஐக்கிய அமெரிக்காவும் இணைந்த ஒத்திகைக்கு முன்பதான நான்கு நாள் தயார்படுத்தலை ஆரம்பித்த மறுநாளே இந்த ஏவல்கள் இடம்பெற்றுள்ளன.

பிரித்தானியா

## நாய்க்கு குரங்கம்மைத் தொற்று



நாயொன்று தனது உரிமையாளரிடமிருந்து குரங்கம்மை வைரஸைப் பெற்றமையைத் தொடர்ந்து குரங்கம்மைத் தொற்றுக்குள்ளானதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இவ்வாறான சந்தர்ப்பம் இதுவே முதற்தடவை என்பதுடன், தொற்றுக்குள்ளானபோது செல்லப்பிராணிகளிடமிருந்து தனித்திருப்பது முக்கியமானது என சுகாதாரத் தலைவர்கள் கூறியுள்ளனர்.

தவிர, ஏனைய விலங்குகளுக்கு தொற்றும் அபாயத்தைக் குறைப்பதற்காக குப்பையை கவனமாக அகற்ற வேண்டும் என உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், நாய்கள் ஏனைய நாய்களுக்கோ அல்லது மனிதர்களுக்கோ நோயைப் பரப்பும் என எவ்வித ஆதாரமுமில்லை என நிபுணரொருவர் கூறியுள்ளார்.

தோலுடனான தொடர்பு, தொற்றுக்குள்ளானவர்களின் ஆடைகளிலிருந்தே குரங்கம்மை பரவுகிறது.

உலகளாவிய ரீதியில் ஏறத்தாழ 350,000 தொற்றுக்குள்ளானதுடன், 12 உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன.

அல்ஜீரியா

## காட்டுத்தீயால் 26 பேர் உயிரிழப்பு



வட அல்ஜீரியாவை நாசமாக்கிய காட்டுத்தீயால் குறைந்தது 26 பேர் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்துள்ளனர்.

இந்நிலையில், சில காட்டுத்தீகளைக் கட்டுப்படுத்துவதற்கு நேற்று முன்தினம் மாலையிலும் ஹெலிகொப்டர்களால் ஆதரவளிக்கப்பட்ட தீயணைப்புப் படைவீரர்கள் போராடிய வண்ணம் இருந்தனர்.

இதேவேளை, பல்வேறு மாகாணங்களிலிருந்து 350 பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

கடந்தாண்டு வட அல்ஜீரியாவில் 90 பேர் காட்டுத்தீயால் உயிரிழந்ததுடன், 100,000 ஹெக்டேயர்களில் மரங்கள் எரிந்திருந்த நிலையில், ஒவ்வோராண்டும் இப்பகுதி காட்டுத்தீயால் பாதிக்கப்படுகிறது.



பங்களாதேஷ்

## ‘மியான்மாருக்கு றோகிஞ்சாக்கள் திரும்ப வேண்டும்’

பங்களாதேஷிலுள்ள முகாம்களில் வசிக்கும் றோகிஞ்சா அகதிகள், மியான்மருக்குத் திரும்ப வேண்டுமென மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் மிஷெல் பச்லெட்டிடம் பங்களாதேஷ் பிரதமர் ஷெய்க் ஹசீனா தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பங்களாதேஷின் தலைநகர் டாக்காவைச் சென்றடைந்த பச்லெட், மியான்மருடனான எல்லைக்கருகிலுள்ள கொக்ஸ் பஸார் மாவட்டத்திலுள்ள றோகிஞ்சா முகாம்களுக்கு விஜயம் செய்திருந்தார்.

இந்நிலையில், எல்லைகங்காலுள்ள தற்போதைய நிலை காரணமாக றோகிஞ்சாக்கள் அங்கு திரும்புவதற்கு ஏதுவான நிலைமைகள் இல்லை என பச்லெட் கூறியுள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 19 ஓகஸ்ட் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.